THE UNDYING LIGHT

GOPALKRISHNA

GOPALKRISHNA GANDHI

Review by

R. PATTABIRAMAN

The Undying Light - BOOK Review

பீடிகை

கோபால்கிருஷ்ண காந்தியின் இந்த நூல் வந்து இரண்டே மாதங்களில் படித்து முகநூலில் 10 இடுகைகளாக எனக்குத் தோன்றிய செய்திகளை ஜூன் 15 முதல் ஜூன் 29, 2025 வரை தந்தேன். அவற்றை அப்படியே தொகுத்து சிறு வெளியீடாக – மின் வெளியீடாக வைக்கலாம் எனத்தோன்றியது. நூல் குறித்து இடுகைகள் பேசட்டும்.

29-6-2025 ஆர். பட்டாபிராமன்

June 15

இலக்கிய வாசிப்பு கொண்டோர் அதை உள்வாங்கி வெளிப்படுத்தும் பலவகை உணர்வுகளையும், அரசியல் வாசிப்பில் உணரமுடியும் என்கிற அனுபவம் கொஞ்சம் எனக்கு உண்டு.

அரசியல் வாசிப்பும் உங்களை அழ வைக்கும். சிரிப்பைத் தூண்டும். திடிரென மேலே செல்லமுடியாமல் அப்படியே திகைத்துக் கூட நிற்கச் செய்யும். வாயடைத்துப் போகும் என்பார்களே அப்படி நிலை ஏற்படும். திடிரென equanimity stage உருவாகக்கூடும். எழுத்து மனித சுபாவங்களின் கூட்டல் பெருக்கல் தானே.

ராஜ்மோகன் காந்தியின் Reflections Recollections சாயலில் இருக்கலாமோ என்றெண்ணித்தான் , கோபாலகிருஷ்ண காந்தியின் நூலான The Undying Light - A personal History of Independent India வை வாங்கினேன். ஏப்ரல் 2025ல் வந்தது என நினைக்கிறேன். நூல் வந்ததை அறிந்தவுடன் பெறவேண்டும் என்கிற உபாதை உந்திதள்ளியது. அவர்கள் குடும்பத்தார்களின் நூல்களை வெளியிடும் அலெப் (ரூபா பதிப்பகத்தார்) வெளியிட்டுள்ளது. அகல உயர பெரிய 600 பக்க நூல். ரூ 1000க்கு அமேசன் கொண்டுவந்து சேர்த்துவிடும்.

கோபாலகிருஷ்ண காந்தி , லட்சுமி- தேவதாசின் மகன்களில் ஒருவர். தாரா, ராஜ்மோகன், ராம் மோகன் கூடப் பிறந்தவர்கள். காந்தி-ராஜாஜியின் பேரப்பிள்ளை. ஆர் வெங்கட் ராமன், ஆர் கே நாராயணன் போன்ற குடியரசு தலைவர்களிடம் செயலராக அனுபவம் பெற்றவர். மே வ கவர்னராக இருந்தவர். எழுத்தாளர். பத்திரிகையிலும் எழுதுபவர்.

காந்தி படுகொலையின் போது அக்கா தாரா , கோபாலகிருஷ்ணனை 3 வயது கூட ஆகாத குழந்தையை தூக்கிக்கொண்டு போய் சோகத்தை காண்பிக்கும் காட்சி..காந்தி தாத்தாவிடம் நேரிடையாக இக்குழந்தை கற்க முடியாமல் போனது. ராஜாஜியைப் பார்த்து கற்க வாழ்க்கை அனுமதித்தது. அப்பா தேவதாசிடம், அதிர்ந்து பேசாத கொஞ்சமாக பேசினாலும் எப்போதும் சரியானதை மிகுந்த வாஞ்சையும் பொறுப்பும் கலந்து பேசும் அம்மாவிடம் கற்கும் குடும்ப சூழல். கூடப்பிறந்த ஒவ்வொருவரும் அவரவர் அளவில் தனித்து சிறந்த மனிதர்களாகிட நடத்திக்கொண்ட சோதனைகளை சக மனிதராக நாம் உணரலாம்.

சுடச் சுட வந்துள்ள கோபாலகிருஷ்ண காந்தியின் இந்த The Undying Light A personal History of Independent India என்கிற 'அணையா விளக்கு' படிக்கும் பக்கங்களை கடக்க கடக்க என்ன செய்திகளை நெசவாக்கியுள்ளது என பார்க்க முடியும். என் காதில் ஏதாவது கிசு கிசுக்கிறதா, என் மனதில் எப்படி படிகிறது, என்ன அனுபவங்களை உரசப் போகிறது எனப் பார்க்க முடியும்.

கோபாலகிருஷ்ண காந்தி 1940 களிலிருந்து, இன்று காணும் இந்தியாவரை 8 இயல்களில் - பத்தாண்டு காலச் சூழலாக எடுத்துக்கொண்டு, நிகழ்வுகளை அசைபோட முயற்சிக்கிறார். இதை முழுமையாக personal memoirs என்றோ , அல்லது விடுதலை இந்தியாவின் வரலாறு என்றோ அவர் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை என்கிறார். சமகால வரலாற்றை தள்ளி நின்று பார்க்கக்கூடிய வரலாற்று ஆசிரியராக இல்லாமல், தன் நினைவு கிடங்கில் அவை உருவாக்கிய அம்சங்களுடன் கலந்து பேசியதை ராஜ்மோகன் தன் Reflections Recollectionsல் செய்தார். அது அளவில் சிறிய நூல்.

இங்கு கோபாலகிருஷ்ண காந்தி துணிச்சலுடன் தான் வாழும் ஒவ்வொரு மாமாங்கத்தின்/ தசாப்தத்தின் சமகால நிகழ்வுகளை அடுக்க முன் வந்துள்ளார். தன்னிடம் , வயதாகி நிற்கும் நாட்டின் மற்றும் குடும்பத்தின் பொக்கிஷங்களை ஆங்காங்கே எடுத்து உலாவ விட்டுவிடலாம் என்கிற எண்ணமும் வயதாக ஒருவருக்கு வரலாம். அரிய புகைப்படங்கள் எனச் சொல்லியுள்ளனர்.

தான் ஒன்றும் அவ்வளவு குறிப்பிடத் தகுந்த மனிதன் அல்லேன்- ஆனால் குறிப்பிடத் தகுந்த நிகழ்வுகளை இதில் தந்துள்ளேன் என கோகிகா (கோபாலகிருஷ்ண காந்தி- இப்படியெல்லாம் பெயரை என் சோம்பேறித்தனத்தால் சுருக்குவது மரியாதைக்கு உகந்ததா- அல்லது பிரியத்தின் பாற்பட்டதா தெரியவில்லை) சொல்கிறார். அவரும் remarkable man தான். நாம் வாழும் சூழலில் இப்படி கொஞ்சபேராவது remarkable ஆக இல்லாவிட்டால், எங்கு போய் என் போன்றோர் தெரிந்துகொள்வது. 80 வயதை நெருங்கும் வேளையிலும், தான் உணரும் இந்தியாவை கைமாற்றி தந்துவிட்டு போகவேண்டும் என்கிற தவிப்பை அவரிடம் நான் உணர்கிறேன்.

ஒரே ஒரு முறை அக்களூர் ரவியும் நானும் அவருடன் சேர்ந்து ஒரு நிகழ்வில் சேர்ந்து மாடிப்படிகள் ஏறின நினைவு. இங்கு தானே கூட்டம் என அவர் கேட்டதற்கு பதில் சொன்ன நினைவு. அதற்கு மேல் நேரிடையாக பேசி பார்த்ததில்லை. பெரும் ஆளுமை/ தவிப்பாளர்/

தாகமுடையோர்களுடன் - சிலபேருடனாவது நூல்வழி உரையாடல் என்பதே எனக்கு வாய்த்த வாழ்க்கை.

எங்கள் தொழிற்சங்கம், கொஞ்சம் கம்யூனிஸ்ட் தலைமை ஆளுமைகள் என்பதை தாண்டி நேரடி பழக்கம் நேரா வாழ்க்கைப் பாதை எனக்கு நேர்ந்தது. ஆனாலும் புத்தகங்களின் வழியே சிலருடனாவது நூல் விடாமல் இல்லை.

அட்டையில் The Undying Light பெரிய 'பாண்ட்டில்' போட்டுள்ளனர். அதேபோல் எழுத்தாளர் பெயரில் கோபாலகிருஷ்ண என்பதை சிறிதாக்கி 'காந்தி' யை பெரிதாக்கிப் போட்டுள்ளனர். அது ஏனோ , எனக்கு வித்தியாசமாக இருந்தது.

இந்தியா என்கிற வளர்ச்சியையும்- ஏழ்மை சூழலையும் மெலிதாக அட்டை காண்பித்துவிடுகிறது.

சரி பார்க்கலாம். விடுதலையை ஒட்டி , பின்னரான ஒவ்வொரு பத்தாண்டையும் கோபாலாகிருஷ்ண காந்தி எப்படி தொடுத்துள்ளார் என…சில நாட்கள் நகரக்கூடிய நூல்..

15-6-2025

#Gopalkrisnagandhi #theundyinglight

June 16

அணையா விளக்கு The Undying Light-2

கோபாலகிருஷ்ண காந்தியின் ‘மெர்க்குரி’ , ‘நான் சாதாரணமானவன் ’ என்கிற இரு ஆங்கில புத்தகங்களுக்கு பின்னர் பெரிய அளவிலான நூலாக ‘அணையா விளக்கு ‘ வந்துள்ளது. முன்னர் இரு நூல்களும் காந்தியின் வாழ்க்கை நிகழ்வுகளை , இந்திய விடுதலைப் போராட்டத்துடன் சேர்த்து தைத்தவைகளாக வந்தன.

அணையா விளக்கு, கோபாலகிருஷ்ண காந்தி குழந்தையாக இருந்ததிலிருந்து மோடி ஆட்சிவரை பேசுகிற நூலாக வந்துள்ளது. விடுதலைக்குப் பின்னர் மாறிவருகிற அரசியல் பின்புலம், பல்வேறு இசங்களின் பின்னணியில் மோதல் களமாக வாக்கு அரசியல் ஆகியவற்றையும் உள்வாங்கிய வெளிப்பாடுகளை இந்நூலாசிரியர் செய்ய வேண்டியுள்ளது.

புத்தகத்திற்குள் 8 புத்தகங்கள் (இயல்கள்) . ஒவ்வொன்றுக்குள்ளும் ஆண்டுவாரியான உள் இயல்கள் என நூல் அடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு புத்தகமும் அதாவது இயலும் தசாப்த கட்டை கொண்டு நகர்கிறது. முதல் தசாப்த கட்டு ஏறத்தாழ 70 பக்கத்திற்கு விரிகிறது.

ஏராள செய்திகளின் மடிப்புகளாக இந்த 1940-49 தசாப்தம் நகர்த்தப்பட்டுள்ளது. அரசியல் நிகழ்வுகள் நமக்கு தெரிந்தவையே. ஆசிரியர் தன் மொழியில் தருகிறார் என்கிற சுவையிருக்கிறது. மனதை பிழியும் காட்சிகள்- குடும்ப சுவாரஸ்யங்கள்- கொஞ்சம் காதோர கிசுகிசு என இப்பக்கங்கள் நகர்கின்றன.

ராஜாஜியை டெல்லியில் கொல்ல முயற்சி நடந்துள்ளது. காரில் அவர் இருக்கிறார் என புல்லட் பாய்ந்துள்ளது. அவர் சற்று முன்னர்தான் தன் பெண் லஷ்மி வீட்டில் இறங்கி காரை அனுப்பியிருந்தார். இது 1946 செப்டம்பர் சம்பவம்.

ஆசிய உறவுகள் மாநாடு , நேரு பம்பரமாக வெளிநாட்டு சார்பாளர்களை உபசரிக்கும் காட்சி. ஜூன் 1947 ஆஸ்திரேலியா காலாண்டிதழ் நேருவை , இம்மாநாட்டின் author, genius, architect எனப் படம் பிடித்தது. மாநாட்டிற்கு ஜேபி - பிரபாவதி தம்பதி எளிய காதி உடையில் வந்தனர். விஜயலஷ்மியும் இந்திராவும் நிகழ்விற்குரிய பட்டாடையுடன் (not in coarse spun but in the finest silk) வந்தனர் என மெலிதான ‘வம்பு செய்தியை’ (factual ஆனாலும்) ஆசிரியர்

தருகிறார். காந்தி வந்து உரையாற்றிய மாநாடு. அதேபோல் விஜயலஷ்மி அலகாபத் ஜேர்னலிஸ்ட் (பின்னர் அம்பாசிடர் ஆனவர்) சையத் ஹுசைனுடன் ஓடிப்போய் (இப்படி சொல்வது நியாயமா?) பிறகு வந்து ரஞ்சித் பண்டிட்டை மணமுடித்தார் என்கிற ‘வம்பு ’ செய்தி ஒன்றையும் (பக் 45) தருகிறார்.

அம்பேத்கர் குறித்து ஆங்காங்கே பெரும் மரியாதைக்குரிய பார்வையை கோபாலகிருஷ்ண காந்தி வைக்கிறார். அவரின் Thoughts on Pakistan தேவதாஸ் வீட்டில் இருந்ததையும் சிறுவனாக அதை அவர் படித்ததையும் சொல்கிறார்.ஏனோ எங்கள் குடும்பம் அவருடன் பழகாமல் போனது என்பதையும் சொல்கிறார்.

There was little, if any, socialising between my parents and Ambedkar. I do not believe he ever visited us, or my parents , him. இவ்வளவிற்கும் இந்துஸ்தான் டைம்ஸ் அலுவலகத்திற்கு கீழ் ‘பாலகம்’ ஒன்றில் அம்பேத்கர் அமர்ந்து மணிக்கணக்காக வாசித்துக்கொண்டிருப்பாராம். ஆனால் எவரும் வாசிப்பின் போது அவரை தொந்தரவு செய்யமுடியாதாம். இதை தேவதாஸ் செயலர் சந்திர சூடன் சொல்லியுள்ளார் என்கிறார் ஆசிரியர்.

அதேபோல் காந்தி மறைவின்போது, சட்ட அமைச்சராக அஞ்சலி செய்ய வந்த அம்பேத்கரின் அத்தருண போட்டோ ஒன்று கூட இல்லையா என கோபாலகிருஷ்ண காந்தி வருத்தப்படுகிறார். காந்தி இல்லாமல் போனது எதிர்கால இந்தியாவிற்கு நல்லது என்கிற கருத்து அம்பேத்கரிடம் இருந்தது பற்றி கோபாலகிருஷ்ண காந்தி , இந்த முதல் இயலில் மௌனிக்கிறார். ஆனால் இந்திய அரசியல் அமைப்பின் நகல் எழுதிய பி என் ராவ் , அம்பேத்கர் வெளிச்சத்தில் மங்கிப்போனார் என்பதை சொல்கிறார். அடிக்குறிப்பில் ஆசிரியரின் வரிகள்

The defining role of this exceptional civil servant (B N Rau) , jurist and diplomat in the making of India’s constitution has been overshadowed by the pre eminence of the chairman of the drafting committee, B R Ambedkar.

ராஜாஜி மே வ கவர்னரான சுவையான செய்தி தரப்பட்டுள்ளது. அங்கு இந்து முஸ்லீம் கலவரம் என்கிற மிகுந்த எச்சரிக்கை உணர்வு கொண்ட நிருவாகி தேவை. படேல் முதலில் கே எம் முன்ஷி பெயரைத்தான் சொல்கிறார். காந்தியிடம் பெயர் தெரிவிக்கப்பட்டது. ‘நோ’ என்கிறார் காந்தி. முஸ்லீம்கள் அவரை நம்பற்குரியவராக பார்ப்பார்களா என்பது கேள்வியானது. ராஜாஜியிடமே யாரைப் போடலாம் எனக் கேட்டனர். அவர் திறமையான நிருவாகியான என். கோபாலசாமி அய்யங்காரைச் சொல்கிறார். என் ஜி என்கிற அவரை கேட்கிறார்கள். அவர் தன்னால்

இயலாது எனச் சொல்லிவிடுகிறார். நேரு படேல் இருவரும் சேர்ந்து ராஜாஜி போகவேண்டும் என்கிறார்கள். ராஜாஜியின் டைரி ஜூலை 29 (1947) சொல்கிறது

The proposal for WB Governor has not been accepted by Gopalaswami Ayyangar. So they asked me to take up. What do I care what post they want me to take?. So I said Yes. Nobody likes it. But it is the beauty of karma yoga!

என்ன விந்தை..காலம் செய்யும் ஏற்பாடு. இரு தாத்தாக்களும் விடுதலைக்கான மாபெரும் ஆளுமைகள். இருவரும் ஆகஸ்ட் 15 அன்று டெல்லியில் இல்லை. தாத்தா காந்தி மதமோதல் தணித்து அமைதி கொணர கல்கத்தாவில். தாத்தா ராஜாஜி கவர்னராக கல்கத்தாவில். சுதந்திர இந்தியாவில் இந்த தாத்தாக்கள் முதன் முதலில் கல்கத்தாவில் சந்திக்கின்றனர். காந்தி fast , ராஜாஜி comment எனக் காட்சிகள். ஆகஸ்ட் 15க்கான நிகழ்வுகளை ரேடியோவை திருகி டெல்லி வீட்டில் பேரன் ராஜ்மோகன் காந்தி உட்பட்டோர் கேட்டல்.

காந்தி மறைந்த செய்தியை பம்பாய் தேநீர்கடையில் ரேடியோ மூலம் ஹரிலால் (காந்தியின் மூத்த மகன்) அறிகிறார். நேஷனல் ஹரால்ட் அலுவலகத்தில் சாராதா பிரசாத் அமர்ந்து பத்திரிகை பணிகளை பார்த்துக்கொண்டிருக்கிறார். அப்போது வயதான தோற்றத்தில் மெலிந்த ஒருவர் இரவு 10 மணிக்கு வந்து, காந்திக்கு அஞ்சலி எழுதியுள்ளேன் , போடவேண்டும் என்கிறார். ஆயிரக்கணக்கில் வருகிறது என சாராதாபிரசாத். இல்லை நான் பாபு காந்தியின் மகன் என ஹரிலால் சொல்கிறார். எவ்வளவு மனதை உலுக்கும் தருணம்.. மறுநாள் தான் ஹரிலால் சென்று தேவதாஸ் வீட்டில் தங்கினார்.

விடுதலை இந்தியாவில் முதல் தூக்கு தண்டனை பெற்றவர்களாக கோட்ச- ஆப்தே கொலையாளிகள் இருக்கின்றனர். மணிலாலும் ராமதாசும் (காந்தி புதல்வர்கள்) தூக்கு வேண்டாம் என பேசி வந்தனர். மற்றொரு புதல்வர் தேவதாஸ், இந்துஸ்தான் டைம்ஸ் எடிட்டர். பத்திரிகை தர்மப்படி நடக்க வேண்டும். பெர்னார்ட் ஷாவிற்கு கருத்துகேட்டு எழுதுகிறார். ஷா தன் பதிலில் மகனாக நீ கருணைகாட்டு எனலாம். நிர்வாகியாக நேரு உரிய தண்டனையை கொடுக்க வேண்டிய நிலையில். தனிப்பட்ட முறையில் தூக்குதண்டனை வேண்டாம் எனச் சொல்வேன் என எழுதினார். ராஜாஜி இவ்விஷயத்தை அரசாங்க நிர்வாகத்திடம் விட்டுவிடுங்கள் எனச் சொல்லி வந்தார். கவர்னர் ஜெனரல் என்கிற வகையில் ராஜாஜி , கோட்சே ஆப்தே சார்பில் உறவினர்கள் அனுப்பிய கருணைமனுக்களை தள்ளுபடி செய்தார். இருவரும் நவம்பர் 15, 1949ல்

தூக்கில் ஏற்றப்பட்டனர்.அவர்களின் சாம்பல் கூட உறவினர்களிடம் ஒப்படைக்கப்படாத சூழல். இது கொஞ்சம் harsh decision என்கிற எண்ணத்தை கோபாலகிருஷ்ண காந்தி வெளிப்படுத்துகிறார்.

மாஸ்கோவிற்கு தூதராக விஜயலஷ்மி பண்டிட் நியமிக்கப்பட்டார். இது nepotism ஆகுமா- ஆம் இல்லை என்கிற இரு பதிலும் இந்த இயலில் கிடைக்கிறது. பண்டிட்டால் ஒருமுறை கூட ருஷ்ய அதிபர் ஸ்டாலினை பார்க்க முடியவில்லை. விஜயலஷ்மிக்கு அடுத்து யாரைப் போடுவது என்பதற்காக , நேரு தேவதாசை போடலாமா எனக்கேட்டு கடிதம் எழுதுகிறார். அக்கடிதத்தில் தேவதாஸ்க்கு அனுபவம் இல்லை, அவ்வளவு புத்திசாலியும் இல்லை என நேரு குறிப்பிடுகிறார்.

பிப் 1949ல் நேரு

Moscow a headache..we have not yet mentioned to him(Devdaas) . I have no idea about his reaction…he has no experience in diplomacy and he is not brilliant..

விஜயலஷ்மியும் தேவதாஸ் பொருத்தமானவர் இல்லை என்கிறார். இங்கு கோபாலகிருஷ்ண காந்தி எழுப்புவது, டிப்ளமசி அனுபவம் இல்லை என்பது சரி, ஆனால் புத்திசாலி இல்லை என எப்படி?

இந்த இயலில் நேரு மற்றும் அவர் குடும்பத்தார் மீதான subtle இடிப்புகளை கோபாலகிருஷ்ண காந்தி தூவிப்போவதாக நான் உணர்கிறேன்.

தேவதாசிடம் நேருவும் படேலும் மாஸ்கோ போ என்கிறார்கள். லஷ்மி கூட போகலாம் என்றார். ராஜாஜியும் சரி போ என்றார். ஆனால் உறுதியாக வேண்டாம் என தன் மனம் சொன்னபடி தேவதாஸ் சொல்லிவிட்டார்.

ராஜாஜியுடன் மகள் நாமகிரிதான் உடன் இருந்து பார்த்துக்கொண்டார். டிசம்பர் 1949ல் கவர்னர் ஜெனரலாக ராஜாஜி நிஜாமின் ஹைதராபாத்திற்கு சென்றார். நிஜாம் நன்கு வரவேற்று மாளிகையில் தங்க வைத்தார். மகள் நாமகிரிக்கு வைர நெக்லஸ் தோடு ஆகியவற்றை அன்பாக ஒரு டிரேயில் வைத்து அனுப்பினார். அப்பா என்ன செய்யவேண்டும் என நாமகிரி. மிகவும் பணிவுடன் நிஜாம் அவர்களுக்கு ராஜாஜி அதை திருப்பி அனுப்பினார். தப்பிக்க இச்செய்தியை ராஜாஜி அனுப்பினார்

Daughter , a widow not accustomed to wearing armaments of this kind, is unable to accept it.

நாமகிரிக்கு வைரம் தேவையில்லை. ஆனால் ‘விடோ’ அதனால் போடுவதில்லை எனச் சொல்லியிருக்க வேண்டாம் எனத் தோன்றியது. நாங்கள் காந்தியின் சீடர்கள் , விலையுயர்ந்த பொருட்களை வைத்துக்கொள்வதில்லை என்றல்லவா அப்பா ராஜாஜி சொல்லியிருக்க வேண்டும். எவ்வளவு பொருள் பொதிந்த வார்த்தைகளை நாமகிரி அப்பாவிற்கே சொல்லிக்கொடுக்கும் அளவு… அருமையான ஆனால் வெளித்தெரியாமல் போன நல்ல உள்ளங்கள்

இப்படி எத்தனையோ செய்திகளுடன் இந்நூல் செல்கிறது. முதல் இயல்தான் பேசியுள்ளேன். பார்க்கலாம்…

16-6-2025

#Gopalkrisnagandhi

#theundyinglight

June 17

அணையா விளக்கு The Undying Light-3

கோபாலகிருஷ்ண காந்தியின் இந்த ‘A Personal History of Independent India’ என்கிற அணையா விளக்கு நூலின் வாசிப்பில் 20 சதத்தை தொட்டுள்ளேன். அதற்குள்தான் இவ்வளவு ‘அலப்பறை’ . இன்னும் 480 பக்கங்கள் 80 சதம் போகவேண்டும். விடுதலை இந்திய வரலாறு குறித்து இந்நூல் நின்று பேசுவதாக இருக்கும் என எனக்குத் தோன்றுகிறது. A Good Refresher of Independent India with packings of personal memoirs என்று மதிப்பிடுகிறேன்.

முதல் இரண்டு இடுகைகளில் நூல் வந்த செய்தி, முதல் இயல் காலமான 1940-49 குறித்த சில செய்திகளை தொட்டிருந்தேன். இரண்டாவது இயல் 1950-59க்கான காலச் செய்திகள்- ஆண்டுவாரியாக ஆசிரியர் தருகிறார்.

தேவதாஸ்- லஷ்மி குடும்பமும் அதன் உறுப்பினர்களும் இந்த ஆண்டுகளில் இந்திய அரசியல், பத்திரிகை, சினிமா, கலை, இலக்கியம், பெரும் ஆளுமைகள், பயணங்கள், ஆசிரியருக்கு வரும் பெருமிதங்கள்- குறைகள்- ஆஹா இப்படி நடந்திருக்கக்கூடாதா என்கிற ஏக்க மூச்சுகளாக - நூலில் பயணிக்கிறார்கள்.

பக்கத்திற்கு பக்கம் அம்பேத்கர் வருகிறார். ஆசிரியர் மிக positive ஆக அம்பேத்கர் மீதான மரியாதையை நூலில் இதுவரை (பார்த்த 120 பக்கங்களில்) கடத்துகிறார். இந்து கோடு பில் பிரச்சனையில் அம்பேத்கர் அமைச்சராக பதவி விலகல் செய்ததை ஏற்றுக்கொண்டு , சற்று casual (இது என் வார்த்தை ஆசிரியரது அல்ல) ஆக அவரை அனுப்பியிருக்க வேண்டாமோ என ஆசிரியருக்கு தோன்றுகிறது. பாராளுமன்றத்தில் ஏன் விலகுகிறேன் என்கிற உரையை, எந்த நிபந்தனையும் அம்பேத்கருக்கு விதிக்காமல் ஜனநாயக நேரு தலையிட்டு செய்திருக்கலாமோ என்கிற உணர்வை ஆசிரியர் தருகிறார். நேருவிற்கு , குடியரசு தலைவர் பாரத் ரத்னா அறிவித்தபோது, அதை அம்பேத்கருக்கும் சேர்த்து அறிவித்திருக்கலாமோ என்கிற எண்ணமும் ஆசிரியரிடம் வெளிப்படுகிறது. அம்பேத்கர் டெல்லியில் மறைந்தபோது, நேரு, பந்த் போன்றவர் போய் அஞ்சலி செய்தனர். நேருவும் நாடாளுமன்றத்தில் அஞ்சலி உரை நல்கினார். ஆனால் குடியரசு தலைவர் பிரசாத்தும், துணைத்தலைவர் ராதாகிருஷ்ணனும் போகாமல் விட்டனரே என்கிற ஆதங்கம் ஆசிரியருக்கு. பிரசாத்- ராதாகிருஷ்ணனுக்கு இன்றும்

நாட்டில் மரியாதை உண்டு, ஆனால் அம்பேத்கருக்குத்தான் strength இன்று என ஆசிரியர் எழுதுகிறார்.

நேரு அம்பேத்கர் இந்து கோடு பில் பற்றி ஆசிரியர் இவ்வரிகளை தருகிறார்

Nehru was passionate moderniser, Ambedkar, his law minister, an impatient reformer. The two were the co architects, engineers, and masons of the bill. But they had different timelines to work in.

எங்கள் குடும்ப டெல்லி சூழலில் பல்வேறு தரப்பட்ட - வெளிநாட்டு தோழர்கள், கறுப்பின நண்பர்கள், இஸ்லாமியர் , கிறிஸ்துவர் என நட்புவட்டாரம் இருந்தாலும், தலித் சார்ந்த நட்பு வட்டம் ஏனோ இல்லை என அசை போடுகிறார் ஆசிரியர். ஆனால் லிபரல், மானுட விடுதலைக்குரிய ஏராள நூல்கள் எங்கள் வீட்டில் இருந்தது எனவும் சொல்கிறார். இந்நூலில் முதல் இரண்டு இயல்கள் நெடுக அம்பேத்கர் மிக positive ஆளுமையாக ஆசிரியரால் வைக்கப்பட்டுள்ளார்.

Planning Commission ல் , அம்பேத்கர் போலவே புகழ் பெற்றிருக்க வேண்டிய வங்க நாமசூத்ர பிரிவிலிருந்து உயர்ந்த தலித் அறிஞர் அறிவியலாளர் astrophysicist மேகநாத சஹாவை ஏன் நேரு கொணராமல் போனார் என்கிற கேள்வியையும் ஆசிரியர் எழுப்புகிறார். புள்ளியலாளர் மகலோனாபிசை நேரு கொணர்ந்தார் . ராஜாஜியைக் கூட நேரு கேட்டார். அவர் மறுத்துவிட்டார்.

எங்கள் TU தொடர்பான செய்தி ஒன்று இந்நூலில் வருகிறது. ஜேபி ரயில்வே சங்கத்திற்கு மட்டுமல்ல, தபால் தந்தி சங்கத்திலும் தலைவராக இருந்தார். வேலைநிறுத்த அறிவிப்பு நேரு உட்பட பலருக்கும் அதிர்ச்சியையும் கோபத்தையும் தந்தது. ஜேபி க்கு நிலைமைகள் எடுத்துச் சொல்லப்பட்டு நிதானப் படுத்தப்பட்டார். எங்கள் தலைவர் ஓம் பிரகாஷ் குப்தா இளைஞர். வளர்ந்து வரக்கூடிய தலைவர். ஜேபி , நேருவிற்கு அடுத்து எனப் பேசப்பட்ட மிக உயர் சோசலிச லீடர். இன்றும் நாங்கள் ஒன்றை எங்கள் கூட்டங்களில் சொல்வோம். அப்போது நேரு அரசு எதிர்த்து வேலைநிறுத்தம் விலக்கமா எனக் கேட்டபோது, இல்லை நான் ஓம்பிரகாஷ்-ஜெயபிரகாஷ் அல்ல என குப்தா பேசியதை. பின் நாட்களில் அனுபவ முதிர்ச்சி கூடக்கூட குப்தா மிக நிதானமான அற்புத தலைவராக உயர்ந்தார்.

இன்றுள்ள வாக்கு அரசியல் strength கொண்டு கோபாலகிருஷ்ண காந்தி அன்றைய சில நிகழ்வுகளை எடைபோட்டு அளந்து சொல்கிறாரோ என்கிற எண்ணம் எனக்கு உருவாகிறது.

முதல் குடியரசு தலைவராக ராஜாஜியா- பிரசாத்தா என்பதில் நேரு படேல் வேறுபட்டனர். படேலும் காங்கிரசும் பிரசாத் என்ற நிலை எடுப்பதை அறிந்து மிகவும் cool ஆக ராஜாஜி கடந்து போனார். இந்த காட்சியை ராஜாஜி வரலாறு எழுதிய ராஜ்மோகன் காந்தி நேர்த்தியாக தந்திருப்பார்

CR was not a saint. He knew disappointment and dejection..he had philosophy enough to smile both at his entry..exit from .

முதல் பொதுத்தேர்தல் முடிந்தவுடன் மதராஸ் ராஜதானி முதல்வர் பதவியை ராஜாஜி ஏற்றே இருக்கக்கூடாது என்கிற கருத்து என்னிடம் வலுவாக இருக்கிறது. கோபாலகிருஷ்ண காந்தியும் இந்த எண்ணத்தை வெளிப்படுத்துவதாகவே எனக்குப்படுகிறது.

விடுதலை இந்தியா குடியரசானவுடன், பிப் 26 1950ல் The Preventive Detention Act க்கு பிரசாத் ஒப்புதல் கொடுத்தது, பிரதமர்- குடியரசு தலைவர் அதிகார சர்ச்சை- இந்து கோடு பில் நிலைபாடு போன்றவை குறித்தும் இவ்வியலில் ஆசிரியர் விவாதிக்கிறார். கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் ஏ கே கோபாலன் தான் preventive detention எதிர்த்து போராடி நீதி கேட்டார். சட்டம் செல்லுபடியாகும் என பெரும்பான்மை நீதியரசர் சொன்னாலும், போராடிய பெருமை ஏகேஜிக்கு வரலாறு தருகிறது.

கோபாலகிருஷ்ண காந்தி சொல்லும் PM- President குறித்த வரிகள்

The PM is the mind of the national as a state, the President is the soul of the state as a nation. The PM leads, the President guides…they have provided not an alternative helm but supplemental plinth..the PM takes decisions, the President influences opinion

கிருஷ்ண மேனனுக்குப் பதில் UK High Commissioner ஆக ராஜாஜியை அனுப்புவது நலம் என நேருவிற்கு மவுண்ட்பாட்டன் எழுதினார். அவரது வரிகள்

Krishna Menon ..just like a match stick to light the Cigarette..you know the matchstick into astray without a thought after it has served the purpose.. பெரிய மனிதர்கள் எப்படியெல்லாம் கதைக்கிறார்கள் பாருங்கள்..use and throw அதான் வாழ்க்கை போலும்

காஷ்மீர் ஷேக் அப்துல்லா ஆட்சியில் சியாமா பிரசாத் சிறையில் மறைந்தது உடல் நிலை பாதிப்பால் என just close செய்ததை ஆசிரியர் சரியா எனக் கேட்கிறார். ஜேபி இதற்கு குரல் கொடுத்தார். முறையான் விசாரணை அமைத்திடு என்றார். அதேபோல் மிக நட்புடன் இருந்த ஷேக் ஆட்சியை நீக்கி, பக்சியை அங்கு ஆட்சிக்கு கொணர்ந்ததுடன், அப்துல்லாவை சிறையில் 11 ஆண்டுகள் வைத்ததும் ஆசிரியருக்கு நியாயமாகத் தெரியவில்லை.

எத்திராஜ் கல்லூரி பெண்கள் மத்தியில் ஆக 15, 1953ல் ராஜாஜி பேசிய வரிகள் ஆசிரியருக்கு உவப்பாக இல்லை. ஏன் தாத்தா எனக் கேட்பதாக எனக்குப்பட்டது. ராஜாஜி வரிகள் (1953 ல்)

I wish you good husbands. You cannot choose husbands. If you begin choosing you begin to quarrel one another. One man is good as another. You must be polite and must able to say, whoever comes I will manage with him. That should be your ideal

தேவதாஸ் லஷ்மி , சதாசிவம் எம் எஸ் என நின்ற ராஜாஜியா என ஆசிரியர் appalling என்கிறார். ராஜாஜியின் வயதும் நிதானமும் உலகம் இருக்கும் சூழலும் அவரை இப்படி ideal பெண்கள் என பேச வைத்ததா… தெரியவில்லை.

1931ல் காந்தியை ரோமில் அன்றிருந்த போப் 11 சந்திக்க மறுத்துவிட்டார். 25 ஆண்டுகளுக்கு பின்னர் சென்ற தேவதாஸ் லஷ்மி, தாரா , ராஜ்மோகன், கோபாலகிருஷ்ண காந்தி அனைவரையும் போப் 12 சந்தித்து அருளாசி நல்கினார்.

அணு ஆயுதத்திற்கு எதிராக ராஜாஜி தொடர்ந்து பேசியது, சோவியத் பல்கனினிடம் வேண்டாமே என்று சொன்னது போன்ற செய்திகளும் வருகின்றன. இன்று போரின் பெரும் கோரத்தாண்டவங்களை கண்டு வருகிறோம்.

1956 வரை தொட்டுக் காட்டியுள்ளேன். படிக்க விரும்புவர்க்கு தூண்டல் என்ற அளவில் எடுத்துக்கொள்ளலாம். பார்க்கலாம்..

17-6-25

#GopalKrishnaGandhi

#theundyinglight

அணையா விளக்கு The Undying Light - 4

கோபாலகிருஷ்ண காந்தியின் 2025 ஏப்ரல் மத்தியில் வந்த நூல் குறித்த எனது 4 வது பதிவை இன்று தந்துள்ளேன். நூலில் அரசியல் என்பதுடன் அவரது குடும்பம்- தேவைகள் - அவர்கள் வளர்ந்த கதையும் சேர்ந்தே செல்கிறது.

காங்கிரஸ் 1955 ஆவடியில் சோசலிசம் எனப் பேசியது. சத்தியமூர்த்தி பெண் லஷ்மி இருந்தார்கள். ராஜாஜி கூட அழைக்கப்பட்டு நியுக்ளியர் தளவாடங்களின் ஆபத்து தீர்மானத்தை கொணர்ந்தார். குருஷேவ் இந்திய வருகையை தேவதாஸ் விரிவாக இந்துஸ்தான் டைம்சில் எழுதிக்கொண்டிருந்தார். சென்னையில் பல்கனினை சந்தித்த ராஜாஜி dismantle nuclear weapons என வேண்டிக்கொண்டார். முதலில் மறுத்த பல்கனின், அமெரிக்கா முன்வந்தால் இணங்கலாம் என்றார். பின்னர் ராஜாஜி 1962ல் அமெரிக்கா சென்று கென்னடியைப் பார்த்து வேண்டிய கதையும் இருக்கிறது.

1956 ரயில்வே விபத்துக்கள், குறிப்பாக அரியலூர் விபத்தை தொடர்ந்து சாஸ்திரி பதவி விலகினார். சாஸ்திரி மீது விமர்சனம் வந்தபோது அவர் பேசிய வரிகள்

I am perhaps small in size, soft in tongue, though not physically strong , I am internally not so weak..

துணை அமைச்சராக இருந்த ஓ வி அளகேசன் தானும் ராஜினாமா என்றபோது, நேரு கடுப்பானார். Nonsense, somebody has to run the ministry என்றார்.

ஆசிரியர் நடந்த பொதுத்தேர்தல்கள் முடிவுகள் பற்றியும், அந்த அந்த ஆண்டுகளில் வந்து மக்களின் ஆதரவைப் பெற்ற சினிமாக்களையும் பேசுகிறார்.

தேவதாஸ் - லஷ்மியின் பெண் தாருவிற்கு கல்கத்தா ஜோதிபிரசாத் பட்டாசார்ஜியுடன் திருமணம் 1957ல் நடந்தேறியது. கல்கத்தா வைதீக குடும்பத்தில் வந்தவர் ஜோதி. நேரு பின்னர் வீட்டிற்கு வந்து லஷ்மி கொடுத்த லட்டுக்களை சாப்பிட்டுக்கொண்டே ராஜாஜி மற்றவர்களுடன் உரையாடி மகிழ்ச்சியை தந்து சென்றார்.

வேறு ஒருமுறை சிறுவனாக இருந்த கோபுவை (ஆசிரியர்) பார்த்து, நேரு பள்ளியில் என்ன விளையாடுகிறாய் என்றார். கோபு foot ball எனச் சொல்ல நீயே foot ball மாதிரி இருக்கிறாய் என கொஞ்சி சென்றார்.

வாழ்க்கை திடிரென திசை மாற்றும். சோகத்தைக் கொட்டும். லஷ்மி கோபுவுடன் பம்பாய் சென்ற தேவதாஸ்க்கு இதய தாக்குதல் நேர்ந்தது. வலியால் சிவ சிவ என தேவதாஸ். 57 வயது தான். அவர் இனி பூமியில் இல்லை. அன்று ஆகஸ்ட் 2 ,1957. அஸ்தியுடன் டெல்லி சென்ற லஷ்மியை , இந்திரா அணைத்து வாரித் தழுவி தன் ஆறுதலை தந்து கூடவே வந்தார். நேரு , என் சகோதரன் போன்றவர் தேவதாஸ் என்றார். பின்னர் வீட்டிற்கு வந்தார். துக்கம் விசாரித்து கிளம்பும் போது மதிய உணவு நேரம் . ஒரு வாய் சாப்பிட்டு போலாமே, லஷ்மி. சாப்பிடலாம். டேராடூனிலிருந்து குழந்தைகள் எனக்காக காத்துக்கொண்டிருப்பார்கள். அவசரம் எனச் சென்றார். சிறுவனான கோபு நினைத்துக்கொண்டார், நேரு ஏராள பேரன்களை பார்க்க விரைகிறார் என்று.

தேவதாஸ் சில நாட்களுக்கு முன்னர்தான் கோபுவிடம் சொன்னார். மனிதன் சீக்கிரம் சந்திரனுக்கு போய்விடுவான், நீ பார்ப்பாய் என. அது நடக்கலானது.

பெரோஸ் காந்தி என்றால் இந்திராவின் கணவர் என்பதுடன், நாடாளுமன்றத்தில் முந்த்ரா கேசை நாற அடித்தவர் என்றும் தெரியவரும். டிடிகே தான் மாட்டினார். சில ஆண்டுகளுக்கு பின்னர் லஷ்மியும் கோபுவும் மதராஸ் வந்தபோது, டிடிகே உடல்நிலை கேள்விப்பட்டு பார்க்கச் சென்றனர். கடவுள் பார்த்துப்பார் என லஷ்மி. அம்மா கடவுள் உண்டா, இது டிடிகே. அவர் மறைந்த செய்தி அறிந்த கர்நாடக இசை உலகம் துக்கித்துப் போனது. செம்மங்குடி அய்யோ போச்சே என்றாராம்,

ஏன் இந்திரா குடும்பத்தினர் ‘காந்தி ‘ சேர்த்துப் போடுகிறார்கள் என்ற பேச்சு வீட்டில் வந்தபோது, லஷ்மி எடுத்துச் சொன்னார். பெரோஸ் பார்சி- Ghandy என்பர். அது Gandhi என்றே பெரோஸ் உடன் வந்தது. நாம் குஜராத்தி காந்தியர்கள். வைச்சுக்கட்டமே, நேரு காந்தி குடும்பத்தில் சம்பந்தம் செய்தார் எனக் கூட இருக்கட்டுமே என லஷ்மி சாந்தப்படுத்தியுள்ளார்.

பெரோஸ் செப்8, 1960ல் தானே காரை ஓட்டிக்கொண்டு டாக்டரிடம் சென்றார்- - heart attack ஆல் மரணித்தார். ராஜாஜி சுதந்திரா கட்சியை ஆரம்பித்திருந்தார். நேரு குறித்து விமர்சனம் செய்தார். லஷ்மி தன் மகன் ராமு - இந்து திருமண பத்திரிகையை நேருவிடம் கொடுக்கச் சென்றார். பெரோஸ் மறைந்த சூழலில் , என் மகன் கல்யாணம் என இந்திராவிடம் சொல்ல மிகவும் கஷ்டமாக இருக்கிறது என லஷ்மி மனம்

இளகினார்.எவ்வளவு பேரன்புடன் அவர்கள் வாழ்க்கையை கடந்துள்ளனர்.

ராஜாஜியும் 81 வயதில் சுதந்திரா கட்சி நிகழ்ச்சியால் ,பேரன் கல்யாணத்தில் முழுமையாக இருக்க முடியவில்லை. ராஜேந்திர பிரசாத்திற்கு செய்தி அனுப்புகிறார். தாங்கள் கல்யாணத்தில் தாத்தாவாக officiating செய்ய முடியுமா ..எவ்வளவு பெருங்குண மனிதர்கள்.. குடியரசுத் தலைவர் பிரசாத் , ராஜாஜி சொன்னதை வைத்து- கல்யாணம் - வரவேற்பு இரண்டிலும் தாத்தாவாக இருந்தார்.

கோபு பள்ளிப்பருவம் முடியப்போகிறது. பல நண்பர்கள் குறித்து தொட்டுச் செல்கிறார். ஒரு பையன் வகுப்பிலேயே masterbate செய்கிறான். இங்கு ஆசிரியர் எழுதுகிறார்.

Everyone thought this as funny..not a few encouraged him..I would avert my eyes. அன்றுள்ள டெல்லி சிறுவனின் சிறு விலகல். செக்ஸ் குறுகுறுப்பு.

25 ஆண்டுகளுக்கு முன்னர், ஒருமுறை திருச்சி கூட்டம் முடித்து, முனிசிபல் பொது கழிப்பறையில் வரிசையாக ஆண்கள் மூத்திரத்தை வெளியேற்றிக்கொண்டிருந்தபோது, ஒரு நபர் அதை செய்தது பார்த்து ஏய் என எங்களில் சிலர் மாரல் போலிசானாது நினைவிற்கு வந்தது.

கோபு செயிண்ட் ஸ்டிபன் கல்லூரியில் ஆங்கில இளங்கலை சேர்ந்தபோது, ராஜாஜி பேரனுக்கு 12 ஷேக்ஸ்பியர் புத்தகங்களை அனுப்பி படிக்கச் சொல்கிறார். 83 வயது கிழவருக்கு , பேரன் ஆங்கிலம் குறித்த கவலை போலும். 1962ல் Gandhi Peace Foundation சார்பில் ராஜாஜி நியுக்ளியர் யுத்த முஸ்தீபுகளை அமெரிக்கா கைவிட வேண்டும் என கென்னடியை சந்தித்தார். ராஜாஜியுடன் சென்ற திவாகர், சிவராவ் என அனைவரும் கிழவர்கள் என நட்வர் கிண்டல் அடித்தார். கென்னடி ராஜாஜியை கூர்ந்து செவிமடுத்தார். இடது காது கேட்காது என்பதற்கேற்ப சீட்டிங் செய்யப்பட்டிருந்தது. ராஜாஜி பயணம் அமெரிக்கா சோவியத் ஒப்பந்தம் பின்னர் வர உதவியது என புரிந்து கொள்ளலாம்.

சுதந்திரா ஆரம்பித்த நிலையில் ராஜாஜி டெல்லி வந்தார். முன்னாள் கவர்னர் ஜெனரல் என்ற protocol எதுவும் தரவேண்டியதில்லை. நான் சுதந்திரா வேலைக்காக வருகிறேன் என பிரசாத்திற்கு கடிதம் எழுதும் நேர்மை ராஜாஜியிடம் இருந்தது.

1961ல் எலிசபத் ராணி டெல்லி வந்தார். நேரு, லஷ்மிக்கும் அழைப்பு அனுப்பியிருந்தார். அறிமுகத்திற்காக நிற்கும் வரிசைப் பட்டியலில்

லஷ்மிக்கும் இடம் இருந்தது. அனைவரும் இதை ஆச்சர்யமாகப் பார்த்தனர். ராணியிடம் நேரு, இது யார் தெரியுமா- லஷ்மி புகழ்வாய்ந்த இந்துஸ்தான் டைம்ஸ் எடிட்டரின் மனைவி (தேவதாஸ் மறைவிற்குப் பின்னர்) காந்தியின் மருமகள், ராணி உங்கள் அப்பா மவுண்ட்பாட்டனுக்கு பின்னர் கவர்னர் ஜெனரலாக உத்தரவு போட்ட ராஜாஜியின் பெண் என விரிவாக அறிமுகப்படுத்தினார். ராணியும் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி என முகமன் தெரிவித்தார். என்ன நேருவின் வாஞ்சை, பேரன்பு…

ராஜாஜி அமெரிக்க செல்கையில் வழி அனுப்ப கோபு சென்றார். தாத்தா நீ பெட் ரண்ட் ரசலை பார்ப்பாயா…என்ன எனக் காதை கொணர்ந்து ராஜாஜி திரும்பக் கேட்டார், ஏய் கோபு அவருக்கு ரொம்ப வயசாகிவிட்டதுடா (ரஸ்ஸல் 90ல்). சொன்னது 83 வயது.

அமெரிக்காவிலிருந்து, கோபு - நிறையப் பேரை பார்த்து உரையாடினேன் . கடவுள் புண்ணியத்தில் உடம்பு ஒத்துழைத்தது என எழுதினார் ராஜாஜி.

1962 தேர்தல் , கோவா விடுதலை சூழலில் கிருஷ்ண மேனன் கிருபளானி மோதலாக பம்பாயில் அமைந்தது. நேருவை வலுவாக விமர்சிக்க இருந்திருக்க வேண்டிய கிருபளானி குரல் , மேனனிடம் தோற்றது. சீனப் போர் சூழலில், ராஜாஜி சற்று மென்மையாகவே நேருவைப் பார்த்தார். என்ன செய்வது, நம்பிய சீனா ஏமாற்றிவிட்டது. ஆனால் எதிரி எப்போது ஏமாற்றலாம் என நினைப்பானே என்றார். பாதுகாப்பு அமைச்சர் கிருஷ்ண மேனன் பலியாக வேண்டியிருந்தது.

ஆசிரியர் படித்த புகழ் வாய்ந்த ஸ்டீபன் கல்லூரிக்கு உரையாற்ற ஜேபியை 1962ல் அழைத்திருந்தனர். கோபு தான் காரில் ஜேபியை கல்லூரிக்கு அழைத்து வந்தார். என்ன பேசவேண்டும் கோபு என ஜேபி.. Nationalism In India, Before Independence and After எனத் தலைப்பு சொன்னோமே என்கிறார் இளம் மாணவர் கோபு. ஓ அதற்கு பின்னர் ஜேபி காரில் மௌனமானார். அசை போட ஆரம்பித்திருக்கலாம். கல்லூரியில் அனைவரின் உளம் கவர்ந்த அற்புத உரையை ஜேபி தந்தாராம். ஆசிரியர் எழுதுகிறார்

My God , what a speech! The gods of political science and of history would have stepped down from their towers to hear it…எப்படிப்பட்ட ஆளுமைகள், காந்தி பேரனுக்கு எப்படிப்பட்ட வாய்ப்புகள்…

1963ல் தும்பா உருவாக்க பாடுபட்ட அறிஞர்களை, உழைப்பாளிகளை ஆசிரியர் சொல்கிறார். 1964ல் காந்தி நேருவின் அணுக்கத் தோழமை

கபூர்த்தலா வம்ச ராஜ்குமாரி அம்ரித் கவுர் மறைந்தார். அவர் health minister ஆக இருந்தபோது BCG vaccine mass immunisation திட்டமிட்டு செய்தது இந்தியாவின் வாழ்நாள் ஆண்டுகளை கூட்ட உதவியது எனலாம்.

1964ல்   காஷ்மீர் ஷேக் அப்துல்லா டெல்லி வந்தபோது, அவரை வரவேற்க நேரு இந்திராவை அனுப்பினார். அழைத்து நல்ல உபசரிப்புகளை செய்தார். அப்துல்லாவும் நடந்தவற்றை மறப்போம் என நேருவிடம் தன் அன்பைக் காட்டினார். நேரு மறைந்த செய்தி அனைவரையும் உலுக்கியது. எங்கும் பெருங்கூட்டம். ராஜாஜி வரமுடியவில்லை. அவர் இரங்கல் செய்தி பெருந்தோழமையைக் காட்டியது. ராஜாஜி எழுதியது

“ Eleven years younger than I, eleven times more important to the nation, eleven hundred times more beloved of the nation, Sri Nehru suddenly departed from our midst and I remain alive to hear the sad news..The old guardroom is completely empty now. I have been fighting Nehru…but I knew he alone could get them corrected …but fighting apart , a beloved friend is gone, the most civilised person amongst all of us”

இளம் வாஜ்பாய் கூட A dream has been shattered, a song silenced, a flame has vanished in the infinite என அஞ்சலி செய்துள்ளார். அவரின் வாரிசுகள் இன்று இதை அறிவார்களா?

எவ்வளவு பெரிய வேலைகளை செய்தவர்கள், கண்ணியமான ஆளுமைகள்.. இந்திய அரசியல் இப்பண்புகளையெல்லாம் உள்வாங்கி நகராதா?

1964 வரை என் தேர்வில் நிகழ்வுகளை சுட்டிக்காட்டியுள்ளேன். பார்க்கலாம்..

19-6-2025

june 20

அணையா விளக்கு The Undying Light 5

கோபால்கிருஷ்ண காந்தியின் மேற்கூறிய நூலின் இயல் 4 ல் நுழைந்துள்ளேன்.

இயல் மூன்றில் - இந்தியா பாகிஸ்தான் யுத்தம், சாஸ்திரி அயூப் தாஷ்கண்ட் உடன்பாடு, சாஸ்திரி மறைவு, இந்திரா பிரதமராதல் என நிகழ்வுகள் போய்க்கொண்டிருந்தன.

டெல்லி இந்துஸ்தான் டைம்ஸ் அலுவலக வீட்டில், தேவதாஸ் மறைவிற்கு பின்னரும் லஷ்மி கோபுவுடன் இருக்க பிர்லாவால் அனுமதிக்கப்பட்டிருந்தார். எம் ஏ முடித்தவுடன், வீட்டிற்கு கீழேயுள்ள அலுவலகத்தில் எடிட்டரைப் பார்த்து, பழகுனராக சேரவா என கோபு கேட்க, எடிட்டர் மூல்காவோகர் வேலைக்கு சேர். ரூ 500 தான் சம்பளம் என்கிறார். அம்மாவிடம் சொல்ல அவர் ஆனந்தமடைகிறார். தாத்தா ராஜாஜி வேண்டாம் , அவனை IAS ஆகச்சொல்லு என்கிறார். தாத்தா சொல்படி தேர்விலும், நேர்முகத்தேர்விலும் ஆசிரியர் வென்றார். நேர்முகத்தேர்வில் ஆங்கில இலக்கியம் குறித்த கேள்வி ஒன்றிற்கு பதில் தெரியவில்லை. அனுபவத்தை தாத்தா ராஜாஜியிடம் சொல்கிறார். ராஜாஜி அது Sinclair Lewis நாவலில் வருவது எனச் சொல்லி அசத்துகிறார். மூதறிஞர் என்ன சும்மாவா?

1967 பொதுத்தேர்தல் . நேரு இல்லாமல் இந்திரா தலைமையில். டெல்லியில் இவர்கள் பகுதியில் புகழ்வாய்ந்த IFS கேடரான இளம் மனோகர் சோந்தி ஜனசங்கம் சார்பில் காங் எதிர்த்து நிறுத்தப்பட்டார். ராஜாஜி சுதந்திரா கடுமையாக மோதிக்கொண்டிருந்தது. லஷ்மியை ஜனசங் சோந்திக்கு ஓட்டுப்போட கோபு convince செய்தார். சோந்தி புகழ் வாய்ந்த சந்தானம் அவர்களின் மாப்பிள்ளை. அரசியலும் காலமும் எப்படியெல்லாம் ஜாலம் காட்டுகின்றன பாருங்கள்!

எங்கள் தொழிற்சங்கத் தலைவர் குப்தா, கட்சிக் கூட்டம் ஒன்றில், சிபிஐ சிபிஎம் பதிந்தா- ஜலந்தர் முடிவான left democratic alternative விவாதத்தின் போது முக்கிய நடைமுறை கேள்வி ஒன்றை அரசியல் தலைமையிடம் எழுப்பினார். ஜனசங்- காங்கிரஸ் என்கிற இரு கட்சிகள் தான் தொகுதியில் இருக்கும்போது, வாக்களிக்காமல் இருக்க முடியாது. ஜனசங்கிற்கு அளிக்க முடியாது. எனவே காங்கிரசிற்குத்தான் போட வேண்டியுள்ளது என தோழர் குப்தா விளக்கமிருந்தது.

காங்கிரசிற்கு மாற்றாக 9 மாநிலங்களில் எதிர்கட்சிகள் சோதனை நடந்தேறின. ஜனசங்கத்துடன் ஆட்சியில் என்கிற இடது சோதனையும் நடந்தது.

ஆசிரியர் -நக்சல் இயக்கம், வெண்மணி கொடுமை பற்றியெல்லாம் தொட்டுச் செல்கிறார். முன்னர் இ எம் எஸ் ஆட்சி கவிழ்ப்பு பற்றி சொல்லியிருந்தார். ஆனால் 1964ல் சிபிஅய் உடைந்தது பற்றி ஏதும் குறிப்பிடவில்லை.

1968ல் ராஜிவ் சோனியா திருமண நிகழ்வில் லஷ்மியும் கோபுவும் நீண்ட வரிசையில் நின்று வாழ்த்தி வந்தனர். ஆசிரியருக்கு மாவட்ட ஆட்சியருக்கான பயிற்சி தஞ்சாவூர் அருகே தரப்பட்டது. தஞ்சாவூரில் அப்போது புகழ் வாய்ந்த கலெக்டர் T V அந்தோணி. விவசாயத்தின் கிளியோபாத்ரா என முதல்வர் திரு கருணாநிதியால் அழைக்கப்பட்டவர். ஆடுதுறை நெல் ஆராய்ச்சி உருவாக உழைத்தவர். அவரிடம் தான் கோபு 'ரிபோர்ட்' செய்தார்.

மொரார்ஜி கோபுவை குஜராத் அனுப்பவே விழைந்தார். தாத்தா ராஜாஜி தமிழ்நாடு என்றதால் கோபு இங்கு posting பெற்றார்.

இந்த கலெக்டர் பற்றி மாணவப்பருவத்தில் என் தாத்தா நடேசன் எங்களிடம் சொல்லியுள்ளார். கலெக்டர் அலுவலகத்திற்கு தாத்தாவுடன், கர்ணம் பழநி, பட்டாமணியம் ஜெய்னுலாதீன் என்பவர்களுடன் போன மாணவ நினைவு எனக்கு. எங்கள் கரந்தை பரசுராமர் தெருவில் ராஜாஜியின் நெருக்க சீடர் டாக்டர் கோபு இருந்தார். நாங்கள் ஆங்கிலத்தை தவறாக படிக்கும்போது கரெக்ட் செய்தவர் அவர். அங்கு சருக்கைக்கு அருகில் ஹரிஜன தெருவிற்கு அந்த டாக்டர் நள்ளிரவு கூடப் போய் காசு வாங்காமல் வைத்தியம் பார்த்து வருவார். இவரின் தம்பி வாரிசுகள் தஞ்சையில் புகழ் வாய்ந்த டாக்டர், ஸ்டேட் வங்கி அதிகாரி, ஐஐஎம் பேராசிரியர் என உயர்ந்தனர்.

கோபு பயிற்சிக்கு வந்தபோது வசதியில்லா வீடு ஒன்றில் , ஸ்டவ் அடுப்பு சமையல் செய்து லஷ்மி போட்டார். தஞ்சாவூர் paintings யை வாங்கி ரசித்தார். கோபுவிற்கு சம்பளம் ரூ 350. ஒரு நாள் பயிற்சிக்கு காரில் கண்டியூர் தாண்டி திருவையாறு அருகே செல்லும்போது, கொடூர காட்சியைக் கண்டார் கோபு. இளம் மனைவியை , சந்தேகம் பெயரில் , தெருவில் அம்மணமாக ஒருவன் இழுத்துச் சென்ற் காட்சி அவரை தாக்கியது. இறங்கி ஏன் என கேட்காமல் வந்தது குறித்து குற்றவுணர்வு இருப்பதாக ஆசிரியர் பதிவு செல்கிறது. இது 1970. புகழ் வாய்ந்த திருவையாறு இப்படி வெட்கக்கர காட்சியை தந்தது.

1969 மகாத்மா நூற்றாண்டை, தஞ்சாவூரில் அமைதியாக அவரின் மருமகள் லஷ்மியும், பேரன் கோபுவும் பார்த்தனர். எம் எஸ், சதாசிவம் ஆராதனா முடிந்து சிறிய வீட்டில் லஷ்மியுடம் வசதி குறைவை பொருட்படுத்தாமல் தங்கினர்.

பயிற்சி முடிந்து கோபுவிற்கு திண்டிவனம் போட்டனர். செஞ்சி தேர்தல், அங்கு நடந்த கள்ள ஓட்டுகள் போன்றவற்றை ஆசிரியர் எழுதுகிறார். ராஜாஜி போஸ்டராக இருந்தாலும் விதிமீறல் இருந்தால் அவரே முன் நின்று கிழிக்க வைத்தார். திண்டிவனம் பகுதியில் தலித் கிராமம் ஒன்று தீக்கிரையானபோது, தீயணைப்பு வாகனம் கூட போகமுடியா கிராமத்தைக் கண்டார். உயர் சாதியினரின் பாரபட்சம் உணர்ந்தார். சாவுக்கு வழிவிடாத சாதி வெறியையும் நிர்வாகரீதியாக எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

புகழ் வாய்ந்த கடலூர் பகுதி தலைவர் இளைய பெருமாள் வந்து காந்தியும் அம்பேத்கரும் உழைத்த நாட்டில் இப்படி அநியாயங்களா என கடுமையாக பேசிச் சென்றார்.

கலெக்டர் அந்தோணி கோபு வந்தவுடன் சொன்ன முதல் அறிவுரை. தமிழ்நாட்டில் சாதி உணர்வு மிக அதிகம். உன் தமிழ் பிராமண பாஷையை முதலில் விட்டுவிடு. இங்குள்ள சாதிகள் குறித்து நன்றாக தெரிந்துகொள் என்றார். நீ வடக்கிலிருந்து வந்த நபராக இரு என்றார்.

அம்மா பார்த்த தாராவை கோபு 1971ல் மணந்தார். நம் பலருக்கும் நேர்வது போல்தான் கோபுவிற்கும். சரியான உச்சரிப்பு இல்லாவிட்டால் கணவனை திருத்துவது, பெர்பக்சனிஸ்ட் மனைவி. சீதா கல்யாணம் பாடியது எம் எஸ். திருமணத்திற்கு காமராஜர் வந்தார். எதிர்கட்சி என்பதால், மேலே விழுந்து நான் உன்னைக் கொண்டாடுவது , உனக்கு நல்லதல்ல எனச் சொல்லி வாழ்த்திச் சென்றார்.

முதல்வர் கருணாநிதி மதுவிலக்கு ரத்து செய்தபோது, கள்ளுக்கடை ஏல நிர்வாகத்தை காந்தி ராஜாஜி பேரன் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ராஜாஜி கடுமையாக எதிர்த்தார். அறிவுரை சொன்னார். ஆனாலும் உத்தரவு வந்தது. என்ன செய்வது என கோபு ராஜாஜியிடம் கேட்க, நீ கலெக்டர்- கவர்ன்மெண்ட் சொல்வதைச் செய். எனக்கு கொள்கை, நான் போராடிக்கிறேன் என்றார்.

பங்களாதேஷ் உதயம் போன்ற நிகழ்வுகளை கோபு பதிவு செய்கிறார். நேருவிற்குப் பின்னர் இந்திரா ஆட்சி என்பதில் ஆசிரியர்க்கு விமர்சனம் இருக்கிறது. கோபால்கிருஷ்ண காந்தி எழுதுகிறார்

The transition from Nehru's to Indira was a shift from the age of earnest striving to that of fidgety acting, from action to drama, from the person Nehru being billeted to serve India being roped into service of the person , Indira

அதாவது ஒரு வரியில் இதை decode செய்தால், நேரு இந்தியாவிற்காக என்ற நிலை மாறி இந்தியா இந்திராவிற்காக என்பது உருவானது என புரிந்துகொள்ளலாம். ஆசிரியர்க்கு bias dominant ஆக இருக்கிறதா?

சற்று கடும் விமர்சனமாக எனக்குப்படுகிறது….

நூலின் மூன்றில் ஒரு பகுதியை இதுவரை தொட்டுக் காட்டியுள்ளேன்..பார்க்கலாம்

20-6-2025

#theundyinglight

#Gopalkrishnagandhi

june 22

அணையா விளக்கு - The Undying Light 6

கோபால்கிருஷ்ண காந்தியின் இந்நூல் வந்து இரண்டு மாதங்கள்தான் ஆகிறது. இனித்தான் மதிப்புரைகள் வரவேண்டியிருக்கலாம் . எனக்கு , விடுதலை இந்தியா குறித்த நல்ல refresher. போனஸ் என்னவெனில் அவர்கள் குடும்பம் குறித்த சில தகவல்கள். தேவதாஸ்- லஷ்மி குறித்து பொதுவாக மிகக் குறைந்த தகவல்களே பொதுவெளியில். குறிப்பாக லஷ்மி ஏன் காந்தி- ராஜாஜி- தேவதாஸ் குறித்து ஏதும் சொல்லாமல் எழுதாமல், குடும்ப உறவுகளுக்குள் நின்று, கல்யாணம் - துக்கம் என நின்று போனார் என்கிற கேள்வி அல்லது ஆவல் எனக்குள்..எந்த sensational emotional அம்சங்களுக்கும் பொது வெளி தீனி போடாமல் சென்றவர் லஷ்மி..

சரி இனி நூலின் பக்கங்களுக்குள்..

1972ல் ராஜாஜி மறைந்தவுடன் அவருக்கு ராஜாஜி ஹாலில் (அதற்கு பின்னர் வந்த பெயர்) பொது அஞ்சலி ஏற்பாட்டை முதல்வர் கலைஞரும் காமராஜரும் செய்தனர். பூதவுடலுடன் சென்ற நாமகிரியிடம் லஷ்மி இனி நாம் beggars என்கிற சோகத்தை காட்டினாராம். என்ன மனதில் தோன்றியதோ தெரியவில்லை. ராஜாஜி மறைவதற்கு சில மணிக்கு முன்னர் ஏறத்தாழ சம வயது தோழர் பெரியார் பார்க்க வந்தார். நரசிம்மா பழம் கொடு என ராஜாஜி பேச்சுவராமல் சொல்ல, பெரியார் பணிந்து அதை ஏற்றாராம். என்ன தோழமை…

1974 கால நிலையில் இந்திரா ஆட்சி, சஞ்சய் தலையீடு குறித்து ஆசிரியர்க்கு விமர்சனம் இருக்கிறது. கோபாலகிருஷ்ண காந்தி எழுதுகிறார்

Huge misgovernance..corruption unemployment, children undernourished even unschooled, high inflation.. இந்திராவிற்கு தேர்தல் உத்திகள் இருந்தது. மக்களிடம் நம்பவைக்கும் வசீகரம் கூட இருந்தது. ஆனால் பேசிய ஏதும் நடைபெறாமலும் இருந்தது என்கிறார் கோபு.

ஜேபி தன் துணைவி பிரபாவதி மரணத்திற்குப் பின் சோர்ந்தார். கோபுவிற்கு எழுதிய கடிதத்தில் there is nothing to console me. I have lost interest in life and whatever I do is only as a duty performed. ஜேபிக்கு வரலாறு அப்படி ஒரு கடமைக்கான காலத்தைக் கொடுத்தது.

இந்திரா தேர்தல் மீதான வழக்கு தீர்ப்பு எமர்ஜென்சி அறிவிப்பு, பாட்னாவிலிருந்து ஜேபி போராட்டங்கள்- மொரார்ஜி, ஜேபி என பெரிய

தலைவர் அனைவரும் கைது போன்ற பல நிகழ்வுகளை கோபு தருகிறார். தேர்தல் , இந்திராவின் தோல்வி, ஜனதா ஆட்சி மொரார்ஜி பிரதமர், ஜேபி லோக்நாயக் புகழ் என காட்சிகளை வரலாறு இட்டு நிரப்பிக்கொள்கிறது.

ஆசிரியர் கோபு எக்மோர் தமிழ்நாடு ஆவண காப்பகத்தில் புதுக்கோட்டை பற்றி தேடிக்கொண்டிருக்கும் நேரத்தில் தான், ஜூன் 26, 1975ல் எமர்ஜென்சி அறிவிக்கப்படுகிறது. இந்த 2025 ஜூனில் அதன் 50 ஆம் ஆண்டு நிறைவு. பெரும் ஜனநாயக படுகொலையாக இன்றளவும் அது பார்க்கப்படுகிறது. காங் குடும்பத்திற்கு , நேரு பாரம்பரியத்திற்கு பெரும் களங்கமாகிப் போனது.

காமராஜர் சென்னையில் லஷ்மியை பார்க்க வந்தார். உடன் ராஜ்மோகன் இருந்தார். சுவையான சாம்பாருடன் நல்ல சாப்பாடு என காமராஜர் அளவளாவி சென்றார். ஜேபி ஊழலை எதிர்த்து போராடுவது சரிதானே என்றார். நேரு படேல், யார் பக்கம் நீங்கள் என ராஜ்மோகன் கேட்க, நேரு பக்கம்தான் என உடன் பதிலைத் தந்தார் காமராஜர்.

எமர்ஜென்சி கால அக்டோபர் 2. ராஜ்காட்டில் அதிகாரபூர்வமானவர் அஞ்சலி. மற்றவர்க்கு அனுமதி உண்டா என்ற சந்தேக நிலை. வெளியே இருந்த வயதான கிருபளானி, சுசிலா நய்யார், ராஜ்மோகன், ராமு ஆகியோர் அஞ்சலி செல்ல சிலருடன் செல்கின்றனர். அனுமதி உண்டு ஆனால் பேசக்கூடாது என்கின்றனர். கிருபளானி காந்தி பற்றி பேச ஆரம்பித்தவுடன் போலீசார் தடுக்கின்றனர். சுசிலா உடனே போலீசாரிடம்

I am a doctor, I am telling you Kripalaniji is an elderly person, you should not touch him. போலிசார் ராஜ்மோகன், ராமு காந்தி பேரன்களை , ராஜ்காட்டிலிருந்து அப்புறப்படுத்தி கைது செய்கின்றனர்.

கிருபளானி சிந்து வழக்கொன்றை சொன்னார். ஊருக்கு வருகிற கொடுமைக்காரன் , ஒரு வீடையாவது விட்டுச் செல்வானாம்..மறுபடியும் வரவேண்டும் என்பதற்காக. அது போல என்னைவிட்டுச் செல்கிறார்கள். மறுபடியும் வேட்டையாட வரலாம்.

தேவதாஸ் உறவுக்காரர் எம் பியாக இருந்த சுமித்ரா குல்கர்னி தலையிட்டு ராஜ்மோகனும், ராமுவும் விடுவிக்கப்பட்டனர். சென்னையில் இதை கேள்விப்பட்ட காமராஜர் துயரம் அதிகரித்தது. அவர் அன்று இறந்தும் போனார். நாமகிரி, லஷ்மி, கோபு சென்று அஞ்சலி செலுத்தினர்.

திமுக ஆட்சி கலைக்கப்பட்டு, கவர்னர் ஆட்சி வந்தது. மிசா கொடுமைகள் நடந்தன. ஜேபி சிறையில் அவதி, பின்னர் டயலிசிசஸ் சிகிட்சை என நாட்கள் நகர்ந்து, 1977 ஜன 30 ல் ஜனதா உருவானது. தேர்தலில் அக்கட்சி வென்று ஆட்சிக்கும் வந்தது.

லஷ்மி தன் டிரான்சிஸ்டரில் கோபு மனைவி தாராவுடன் தேர்தல் முடிவுகளை கேட்டுக்கொண்டிருந்தார். தமிழ்நாட்டில் இந்திரா வெற்றி செய்திகள் வந்தன. லஷ்மி இந்தியில் கடவுளே என அழைத்தார். ராமா சோதனை ஏன் , தவறு செய்தவர்களை சரி செய்ய மாட்டாயா என்றார். அவருக்கு ராமன் மகிழ்ச்சியை தந்துவிட்டார் போலும்..ஜனதா வென்றது.

வேறு ஒரு சுவாரஸ்யமான நிகழ்வையும் கோபு சொல்கிறார். கோபுவிற்கு கொஞ்சம் ஆர்வமும் அவசரமும் போலும். இந்திரா வீட்டை காலி செய்திருப்பார், மொரார்ஜி வந்திருப்பார் என்கிற நம்பிக்கையில், போன் அடிக்கிறார். எடுப்பவர்களிடம் சொல்லி மொரார்ஜியுடன் பேசலாம் என்கிற எண்ணம். தொலைபேசியை எடுத்த பெண்மணியிடம் பிரதமர் வீடா, கேட்டது கோபு. Nahin galat number என severe toneல் பதில் வந்தது. அது இந்திரா அம்மையாரின் குரல். எமர்ஜென்சி கொடுமை தனி, தோற்றவுடன் தான் பிரதமர் இல்லை என்கிற நினைவின் வெளிச்சத்தில் தானே போனை எடுத்து இது பிரதமர் எண் அல்ல wrong number எனச் சொல்லி வைக்கும் தன்மையும் சேர்த்து பார்க்க வேண்டிய உளவியல்.

விஜயலஷ்மி பண்டிட் எமர்ஜென்சி தவறு என விமர்சித்தவர். ஆனாலும் தன் அன்புக்குரிய அண்ணன் மகள் ரேபரலியில் தோற்றது அவர் கண்கலங்க வைத்தது என நயன் தாரா எழுதுகிறார். பார்த்தபோது இந்திராவை தழுவி , நீ ஏதும் பேசவேண்டாம் விடு என்றாராம்.

தமிழ்நாட்டில் எம் ஜி ஆர் ஆட்சி ஏற்பட்டது. இந்திய அரசியலில் சினிமா உலகத்திலிருந்து முதல்வராக வந்த முதலாமவர் என்ற வரலாற்றை எம் ஜி ஆர் உருவாக்கினார். கோபு IAS அதிகாரியாக துறைசார்ந்து சொல்லும்போது, முதுகை தட்டிக்கொடுத்து செய்யலாம் double action என்பாராம் எம் ஜி ஆர். நிதிச் செயலர் அறியாமல் கூட இது நடந்துவிடுமாம். எக்மோர் தில்லையாடி வள்ளியம்மை திறக்கும்போது, அப்படி பெயரிடுவதே நல்லது எனச் சொன்னதே எம் ஜி ஆர் தானாம். கைத்தறி துறையில் கோபு, காந்தி புகழ்ந்த தியாகப்பெண் பெயரை சூடல் என்கிற பொருத்தம் நேர்ந்தது.

கோபு மனைவி தாராவிற்கு அக்டோபர் 2 அன்று குழந்தை பிறக்கும் வகையில் சிசேரியன் செய்யலாமா என டாக்டர் ஆர்வக் கோளாறில் கேட்டபோது, சரியாக ‘ நோ ‘ சொன்னார் தாரா. இயற்கையாக அன்று பிறந்தால் சரி , இல்லையெனில் எப்போ பிறந்தாலும் சரியே என்றார். அக்டோபர் 1 அன்று குழந்தை பிறந்ததாம்.

1978ல் கோபு குடும்பத்திற்கு இரு மகிழ்ச்சி செய்திகள். தாராவிற்கு பிரியமான புகழ் வாய்ந்த ornithologist Salim Ali வீட்டிற்கு வந்தது. தாரா பின்னர் அவர் தொடர்பான நூல்களைக் கொணர்ந்தார். அடுத்து இலங்கை kandy அலுவலக வேலை..

பிரதமர் மொரார்ஜி கண்டி வந்தபோது, கோபுவின் குழந்தை கைப்பிடித்து ‘அ’ போடவைத்தது, கோபுவை மருத்துவ மனையில் பார்த்தது போன்ற அன்பு நிகழ்வுகள் நடந்தன. மொரார்ஜி அன்பு தொடர்ந்து அவர் மறையும்வரை கிடைத்தது.

ஜனதா தோல்வி, மீண்டும் இந்திரா ஆட்சி- சஞ்சயின் அதிகாரம், பிந்தரன் வாலா பொற்கோயில் - இந்திரா படுகொலை, சீக்கியர்கள் வேட்டையாடப்படுதல், ராஜிவ் பிரதமராதல்- ஷா பானு வழக்கு, போபர்ஸ் , அயோத்தி பூட்டு திறப்பு, இலங்கை தமிழர் பிரச்சனை , கியானி ஜெயில் சிங் மோதல் என நிகழ்வுகள் நடந்தேறின.

திரவியம் தமிழ்நாட்டில் காபினட் செயலராக இருந்தபோது, மதராசி எனப் பேசுவோரை வெறுப்பேற்ற வேட்டியிலேயே டெல்லி செல்வாராம். கோபு அவர்களுக்கு கவர்னர் மாளிகையில் பொறுப்பு, பின்னர் துணை ஜனாதிபதி ஆர் வெங்கட் ராமனின் செயலர் என வாய்ப்புகள் வந்தன.

ஆர்வி யுடன் சீன தூதரக நிகழ்ச்சி ஒன்றில் ஈ எம் எஸ் பார்க்க வாய்ப்பு கோபுவிற்கு கிட்டியது. ‘புரோடகால்’ படி தோழர் ஓரமாக சற்று தனியே அமர்ந்திருந்தார். கோபு போய் துணை ஜனாதிபதி அருகே போகலாமா எனக் கேட்க ஈ எம் எஸ் உடன் வந்து உரையாடினர். ஆர்வி ஈ எம் எஸ்ஸை மிகுந்த மரியாதையுடன் பார்த்து உரையாடியதை கோபு சொல்கிறார். திரும்பி வருகையில் ஈ எம் எஸ் பற்றி வெங்கட் ராமன் சொன்ன வரிகள் பற்றி கோபு

What are we before this giant man! He had inherited a big tharavad estate but gave up everything for his cause, everything, stressing the v impact-fully

ஆர் வியும் அற்புதமான மிக நிதானமான மனிதர், அறிஞர் என கோபு சொல்கிறார். இலங்கை சமாதான முயற்சி, தாக்குதலிருந்து தப்பி வந்த ராஜிவ்வை, ‘புரோடகால்’ மீறி விமான நிலையம் சென்று வரவேற்று பாராட்டி வாழ்த்தியவர் ஆர்வி. அதேபோல் எம்ஜிஆர் மறைந்தபோது,

அற்புத மனிதர் போகவேண்டும் எனச் சொல்லி புரோடகால் பார்க்காமல் வந்தவர் ஆர்வி. அதேபோல் ஆர்வியா விஆரா என குடியரசு தலைவர் தேர்தலின் போது , கிருஷ்ண அய்யர் போன்ற சிறந்தவர்களை எதிர்த்து நாடு முழுக்கச் சென்று ஆதரவு தேடக்கூடாது என முடிவெடுத்து, மிக உச்ச நாகரீகம் பார்த்தவர் ஆர்வி. அவர் சொன்ன வரிகள்

When the country is plagued by so many divisions, what is the point of a future Rashtrapati going about dividing the presidential vote? அவர் பெரும் வெற்றி பெற்றார் என்பது வரலாறு.

ஏறத்தாழ நூலின் நடுப்பகுதிக்கு வந்துள்ளேன். எனக்கு தோன்றியவற்றை இந்த 6 பதிவுகளில் சொல்லியுள்ளேன். அவரவர் வாசிக்கும்போது சுவை மாறலாம்…

பார்க்கலாம்..

22-6-2025

#theundyinglight

#Gopalkrishnagandhi

june 23

அணையா விளக்கு The Undying Light - 7

மேற்கூறிய நூல் 600 பக்கங்களில் தன் ஞாபக அடுக்குகளின் உள் மடிப்புகளை கொண்ட ஒன்று. விடுதலை இந்திய அரசியல் சாலையின் high ways ஒன்றில் போவது போன்ற உணர்வை வாசகருக்கு கொடுக்கலாம்.

இந்திரா அம்மையாரின் படுகொலை துயரக் காட்சிகளை கடந்து போகவேண்டும். காலை 9.40 எங்கள் சிறிய தொலைபேசி அலுவலகத்தில் ஸ்விட்ச் போர்டில் சக பணியாளர்களுடன் இருந்தபோது, பக்கத்து தேநீர் கடை ரேடியோ பிபிசி , வாய்ஸ் ஆப் அமெரிக்கா இந்திரா சுடப்பட்டதை சொல்கிறது எனச் செய்தி வந்தது. இந்திய வானொலி ஏதும் சொல்லாமல் இருந்த நேரமது. நான் எப்போதும் கவலைப்படாமல் அழைப்புகளை செய்யக்கூடிய இளங்கன்று அப்போது. எம்பசிகளைக் கூட அழைப்பது நடந்துள்ளது. காங் அலுவலகம்.. எனக்கு ஊர்ஜிதமில்லா நினைவு..கமலாபதி திரிபாதியா வேறு எவரா..ஏனோ உள்ளுணர்வால் துண்டித்துவிட்டேன்.

1977 சிபிஅய்யின் பதிந்தா, 1978 சிபிஎம்மின் ஜலந்தர் கட்சி தீர்மானங்களின் செல்வாக்கும், இந்திரா அம்மையார் மீதான தொடர் விமர்சனக் கட்டுரைகளின் தாக்கமும் எங்களிடம் இருந்த நேரம். அரசியலில் முக்கியமானவர் , சவாலுக்கு உரிய தலைவர் அகற்றப்பட்டுவிட்டார் என்ற எண்ணம், கேவலமாக என்னிடம் எழுந்தது. எனக்கு அப்போது வயது 28. அருகில் இருந்த சில பெண் ஊழியர்கள் சோகத்தில் சொற்களை வெளிப்படுத்தினர். அவர்களில் எவரும் கட்சி சார்ந்தவர் அல்லர். Common sense human sense கொண்டவர்களாகவும், நான் ஏனோ political biased sense கொண்டவனாகவும் இருந்த நாளை திரும்ப பார்த்துக்கொள்கிறேன். வெட்கப்படுகிறேன்..

இதேபோல ராஜிவ் ஸ்ரீபெரும்பதூர் கொலை நாளிலும் வேறு அனுபவம் எங்களுக்கு. 1991 தேர்தல் பிரச்சாரத்தில் தோழர் ஜெகன் தலைமையில் குடவாசல் பகுதியில் முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் இருந்தோம். எங்களைத்தாண்டி பார்த்துக்கொண்டே மணிசங்கர் அய்யர் தன் காங் சகாக்களுடன் எதிரே பிரச்சாரத்தில் சென்றுகொண்டிருந்தார். இரவு 11 மணியளவில் கும்பகோணம் வந்தோம். ஊரே எங்கும் நிசப்தம் . போலீஸ்காரர்கள் எங்களை எவரும் நிற்காதீர்கள், ராஜிவ் படுகொலை, உங்கள் இடத்திற்கு போங்கள் என விரட்டலானார்.

மறைந்த குடந்தை ஜெயபால் எங்கள் அனைவருக்கும் உணவு தேடி அலைந்தார். இறுதியில் கல்யாண மண்டபம் ஒன்றிற்கு சென்று இரவு 12 மணிக்கு மேல் உப்புமா கிளறி போடப்பட்டது. எவரும் ஊர் திரும்ப பஸ், ரயில் இல்லை. அடுத்த நாள் மாலை ரயில் வாய்ப்புள்ளவரை ஏற்றி சென்னை உள்ளிட்ட ஊர்களுக்கு அனுப்பினோம். அனைவரும் சென்ற பின்னர், குடந்தை தோழர்களுடன் நான் . பஸ் இல்லை. ஆனாலும் வந்த அனைவரையும் ஜாக்கிரதையாக ஊர் அனுப்பி வைத்தோமே என்கிற ஆறுதல். வங்கித் தலைவர் கோவிந்தன் சைக்கிளில் ஊர் போகிறாயா எனக் கேட்டார். தொழிற்சங்கத் தலைவர் கணேசன் குடவாசல் வரை சைக்கிளில் கூட வருவார் என துணை சேர்த்து , சைக்கிள் கொடுத்து அனுப்பினர். குடந்தை- திருவாரூர் 40 கிமீ இருக்கலாம்.

வழியெங்கும் ராஜிவ் படம் மாலைகள். திமுக கொடிக்கம்பங்கள் தெருவில் சாய்க்கப்பட்ட காட்சிகள். கார் வண்டி எதையும் ஆங்காங்கே ஊர் இளைஞர்கள் கூடி விடவில்லை. சைக்கிளில் சென்ற நானும் விளக்கம் கேட்கப்பட்டே வழிவிடப்பட்டேன். குடவாசல் தாண்டிய பின்னர் தனித்து 22 கிமீ வீடுவரை ...ஏதோவொரு வேகம். சைக்கிளும் காலும் கையும் கண்களும் தோழமை பூண்டன . கோவிந்தன் சைக்கிள் இன்றும் அவருடன் நினைவில்.. வழக்கம்போல் காலுக்கு துணவியாரின் பரிவு சிகிட்சை.

நூலுக்குள் வந்துவிடுகிறேன். காட்சிகள் சொந்த அனுபவங்களை கொஞ்சம் பேச வைத்துவிட்டது.

ராஜிவ் பெரும்பான்மை பெறமுடியா சூழலில் விபி சிங்கை பிரதமராக அழைத்தார் குடியரசுத்தலைவர் ஆர்வி. முன்னதாக அமேதியில் ராஜிவ் எதிர்த்து போட்டியிட ராஜ்மோகன் காந்தியை விபி சிங் convince செய்தார். Real Gandhi vs fake Gandhi என்கிற ஆரோக்கியமற்ற பிரச்சாரத்தில் ராஜ்மோகன் போன்ற தெளிவான அறிஞர் சிக்கியிருக்கக்கூடாது . சிக்கினார் என்ன செய்வது. ராஜிவிடம் தோற்றார். பூத் பல குண்டர்களின் கையில் என்கிற செய்தியும் வந்தது. காந்தியின் பேத்தி தாராவை காங்கிரஸ் அணுகியபோது ‘நோ’ என அவர் தெளிவாக இருந்தார்.

விபி சிங் பிரதமராகும் போது அதுவரை இந்தியா பார்த்திராத உள்துறை பொறுப்பை காஷ்மீர் சார்ந்த முப்டி முகம்மது சையத் அவர்களிடம்,முதல் முறையாக இஸ்லாமியர் ஒருவருக்கு வழங்கினார். அவர் ஆட்சி மண்டல்- மந்திர் பிரச்சனை என வரலாறாக நீண்டு அடங்கியது. இடதும் வலதும் சேர்ந்து ஆட்சியை தாங்கி நின்ற காட்சியை இந்தியா கண்டது

இலங்கை தமிழர் பிரச்சனை ராஜிவ் பலியை வாங்கிக்கொண்டது. காபந்து சர்க்கார் சந்திரசேகர் பொறுப்பில். ராஜிவ் கொலை செய்தி ஆர்விக்கு எட்டி, சேஷன், சந்திரசேகர், நரேஷ் சந்திரா, கோபு போன்றோர் நள்ளிரவில் நாட்டில் அமைதி நிலவ ஆலோசித்தனர்.

Bureaucrats என்றால் எப்படி என்பதை காபினட் செயலர் நரேஷ் சந்திராவின் கூற்று காட்டியது. அவர் ஆர்வியிடம்

Sir..the tragedy is unimaginably great, but let me assure you..no need for any panic, no need to pause election process. The borders are being watched. If I may say Sir…The person killed was a young charismatic leader with long years of service ahead of him. But he was former PM,not the PM. The PM Chandrasekarji is PM in every sense and heading the govt…

தேர்தல் முடிவிற்கு பின்னர் ராவ் தலைமையில் காங் ஆட்சி அமைந்தது. நிதிக்கு ஐ ஜி படேல் அல்லது மன்மோகன் என அலெக்சாண்டர் ராவிற்கு சொன்னார். ஆர்வியும் அவர்கள் சரியானவர்களே என அறிவுரை சொன்னார். ஐஜி படேல் முடியாது எனச் சொன்ன சூழலில் மன்மோகன் வந்தார். LPG புதிய பொருளாதார கொள்கைகளுக்கான உறுதியான அடித்தளம் அமைந்தது.

ராவ் நேரு குடும்பம் அல்லாத படேல், ஆசாத் , நேதாஜி போன்றவர்க்கு பாரத் ரத்னா வழங்கி பாத்தியதை என்றால் மற்றவரும் உண்டு எனக் காட்டினார். ராஜிவ்க்கு தந்துதான் இதைச் சாதுர்யமாக செய்தார். மொரார்ஜிக்கு கொடுப்பதில் ஆர்வி க்கு ஆர்வமில்லை. மொரார்ஜி வரமுடியா வயது சூழலில் தான் போய் கொடுக்க விரும்பாமல், அஞ்சலில் அனுப்புங்கள் என ஆர்வி சொன்னது சரியாகப் படவில்லை. அத்வானி இதை a graceless act என விமர்சித்தார்.

நேதாஜி குடும்பத்தினர் எதற்கு வேண்டவே வேண்டாம் என மறுத்தனர். ஆசாத் வாரிசுகளும் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை. படேல் பேரன் வந்து வாங்கிக்கொண்டார்.

ஆர்வியுடன் நெருக்கமாக அருகில் இருந்து 7 ஆண்டுகள் பயணிக்கும் வாய்ப்பு கோபுவிற்கு. தொடர்ந்து ஜனாதிபதி அலுவலில் அவருக்கு பின் இருக்க விரும்பவில்லை. தமிழ்நாட்டிற்கு வந்தால் ஜெயலலிதா அம்மையாருடன் ஒத்துப்போகுமா என்கிற தயக்கம். லண்டனில் நேரு மய்யம் ஒன்றிற்கு டைரக்டர் வாய்ப்பு வந்து லண்டன் வாழ்க்கைக்கு சென்றார் கோபு. அங்கு பல scholarகளுடன் பயணம்.

ஜோதிபாசு ஒருமுறை வந்து உரையாற்றினார். அற்புதவுரை என லண்டன் அரங்கில் இருந்தோர் பாராட்டினர். பாசு மிக நேர்மையாக ,

இதை எழுதிக்கொடுத்தது உத்சா பட்நாயக் (திருமதி பிரபாத் பட்நாயக்) என்றார்.

1992ல் பாபர்மசூதி இடிப்பு என்கிற அரசியல் சர்ச்சை தன் வரலாற்று சாலையை உருவாக்கிக்கொண்டது.

பார்க்கலாம் கோபு எப்படி மேலும் தொடுத்துள்ளார் என…

23-6-2025

#theundyinglight

#Gopalkrisnagandhi

june 25

The Undying Light -8

இன்னும் பதிவுகள் இந்நூல் குறித்து வேண்டுமா எனக் கூட தோன்றியது. குறைத்துக்கொள் என மனக்குரலும் அதிகாரமானது. சரி பார்க்கிறேன் எஜமான் எனச் சொல்லிவிட்டு, நான் செய்யவேண்டியதை ஆரம்பித்தேன். ஆசைக்கு அளவேது. எழுதுவதும் அப்படி ஆசையா , இல்லை மன அவஸ்தையா..தெரியலை.

இந்நூல் குறித்து ஏற்கனவே 7 பதிவுகள் எழுதிப் பார்த்துள்ளேன். உயர் இடங்களின் ஆட்டம் பாட்டம் சில நேரம் உன்னத மானுட மேன்மைக் காட்சிகள் என உணர்ந்த சிலவற்றை பதிவு செய்தேன்.

பிரதமர்கள், குடியரசு தலைவர்கள், தூதர்கள் என பலரும் எப்படி வருகிறார்கள், என்ன ஆகிறார்கள்….மேலும் புகழ் கூட அல்லது சரிய நடந்தைவைகளுடன் அவர்கள் வரலாறாகின்றனர். சிலருக்கு தொடர் வெளிச்சம். சிலருக்கு ஒருமுறை போடப்படும் பல்ப் உடன் சரி. அது எரியவில்லை எனில் அத்துடன் அவர்களும் இருளுடன் இருளாக…கேட்க புகழ் சுமக்க ஆளின்றி..

அமைப்புகளின் சிஸ்டத்தின் சாமர்த்தியமது. தான் தொடர அது முடிந்த பலரை அடித்தள்ளி பீடமாக்கி நிற்கப் பார்க்கும்.

கோபால்கிருஷ்ண காந்தி லண்டன் நேரு மய்யம், பின்னர் தென்னாப்பிரிக்கா தூதரக பணி எனச் செல்கிறார். அங்கு அதிபர் மண்டேலாவுடனான பழக்கம், தாத்தா வாழ்ந்த போராடிய இடங்கள், பெரியப்பா மகள் இலாகாந்தி பற்றிச் சொல்கிறார். தூதரக பணி கடிதத்தை வாங்கிய மண்டேலா கோபுவிடம் சொன்ன வரிகள்

I am very happy to welcome you, the descendant of a man who introduced the first organised and disciplined political struggle in our country..காந்தியால் பேரனுக்கு கிடைக்கும் நல்வாய்ப்பு போலும். நம்மூர்ல காந்தியை ‘பாபு’ எனச் சொன்னது போல், மண்டேலாவை அவர்கள் ‘மடிபா’ தந்தை என்றனர்.

குஜ்ரால் அவர்கள் கோபுவிற்கு appointment order sign செய்வதற்கு முன்னர் ராஜ்மோகனுக்கு போன் செய்தார். நீ போறியா பெயரை மாற்றிவிடுகிறேன் எனக் கேட்டார். என் சகோதரனே போகட்டும் என அவர் சொன்னதும் செய்தி. நல்ல சகோதரர்கள் போலும்…

அடுத்து கே ஆர் நாரயணன் குடியரசுத் தலைவர் ஆனபோது அவருக்கு செயலராகும் நல்வாய்ப்பு கோபுவிற்கு அமைந்தது. அவர் இவரை கேட்டு வாங்கிக்கொண்டார். கேஆர் என் தேர்ந்த நேருவிய அறிஞர்.

தேவ கெளடா , குஜ்ரால் சோதனைகள் முடிந்து வாஜ்பாயின் 13 நாட்கள், பின்னர் மாதங்கள் என சோதனைகளை பாஜக நடத்த துவங்கியது. வாஜ்பாய் மார்ச் 1998ல் பதவியேற்ற நாளில் தோழர் இ எம் எஸ் மறைந்தார். நாரயணன் நேரில் கட்சி அலுவலகம் சென்று அஞ்சலி செய்தார். குடியரசு தலைவர் கட்சி அலுவலகம் சென்று அஞ்சலி செய்வது புரோட்டகாலுக்கு அப்பாற்பட்ட ஒன்று. இ எம் எஸ் அவ்வளவு மரியாதையை தன் சேவை உழைப்பால் பெற்றிருந்தார். நாராயணன் வரிகள்

EMS a social theorist of the highest order and originality and an educator of people as well as their leader…என்ன சத்தான வரிகள்

பொக்ரான் அணுசோதனையை, இந்திராவிற்கு பின்னர் வாஜ்பாய் நடத்திக் காட்டினார். பாகிஸ்தான் உறவுச்சோதனைகள் எல்லா பிரதமருக்கும் தலைவலியே. ஜெயலலிதா அம்மையாரின் ஆதரவு விலகிய நிலையில் வாஜ்பாய் அரசு நீடிக்க முடியாமல் மீண்டும் தேர்தலை நாடு சந்திக்கும் நிலை உருவாக்கப்பட்டது. ஒரே வாக்கில் அவர் கவிழ்க்கப்பட்டார்.

வாஜ்பாய் அரசில் எவர் மந்திரிகளாக வேண்டும் என்கிற லிஸ்டில் ஆர் எஸ் எஸ் தலையீடு வெளிப்படையாக இருந்தது. மாறி மாறி தரப்பட்ட லிஸ்டை பொறுமையாக இருந்து கேஆர் என் அங்கீகரித்தார். வாஜ்பாய் காலத்தில் அரசமைப்பை திருத்த கமிட்டி என ஒரு டிராப்ட் நாராயணனிடம் வந்தது.அவர் பெரும் அறிஞர். மிக எச்சரிக்கையாக அதை வாஜ்பாய் போன்றோர் புரிந்து ஏற்கும் வகையில் திருத்தி சாரப்படுத்தினார். Basic structure யை பாதுகாத்து அதற்கு பாதகமில்லாமல் பரிசீலனை செய்வது என்கிற சாரத்தைக் கொணர்ந்தார். அரசமைப்பு சட்ட மேன்மையை இவ்வாறு வெளிப்படுத்தினார்

The constitution , which India adopted 50 years ago , has served us well. It has been a reliable guarantor of parliamentary democracy , secularism and fundamental rights, which all of us cherish. It has also inspired the spread of democratic consciousness in our society, empowering dalits, adivasis, bcs and women and making our system of governance more participative and progressive

எவ்வளவு மேம்பட்ட புரிதலைக் அவரது வரிகள் காட்டுகின்றன. சீன அதிபர் ஜியாங் கேஆரென் அவர்களை வரவேற்றபோது

An engineer in mechanics and dynamics, an expert in State and diplomatic affairs என்றார். நாரயாணன் தான் மெக்கானிக்கல் பொறியாளர் மட்டுமல்ல, social political engineer எனச் சரியாக தன்னை நிறுவிக்கொண்டார்.

அவரது எழுத்துக்கள் உரைகள் காங்கிரஸ் சார்பு நிலை காரணமாக போதுமான வெளிச்சம் பெறவில்லை. சமூக மாற்ற சிந்தனைகள் கொண்டவை அவை.

அடுத்து கோபுவிற்கு இலங்கை ஹை கமிஷனர் பதவி என வாஜ்பாய் அரசாங்கம் முடிவிற்கு வந்தது. ஈழ விடுதலைபோர்ர் உக்கிரமாகிக்கொண்டிருந்த சூழல். போவதா வேண்டாமா பெரும் போராட்டம். பல பெரிய ஆளுமைகளை சந்தித்து கோபு அறிவுரை பெறுகிறார். வெளியுறவுத்துறை தகவலில் பிரபாகரன் பற்றிய மதிப்பீடு

For him a solution is not a solution..he cannot compromise without inviting revenge..he has to keep the conflict going inorder to survive..

கோபுவிற்கு தான் பாதி தமிழன் (தாத்தா அம்மா வழி) என்பது வரமா சாபமா என்கிற கேள்விக்கு ஒவ்வொருவரும் வெவ்வேறு பதிலைத் தந்தனர்.

90 வயது ஆர் வெங்கட் ராமன் இலங்கை அரசியலின் இண்டு இடுக்குகளை கவனமாக கையாள வேண்டியதைச் சொல்லித்தந்தார். அவர் துணவியார் மகனிடம் செலுத்தும் வாஞ்சையைக் காட்டி வாழ்த்தினார்.

எம் எஸ் அம்மா கடவுள் உன்னோடு இருப்பார். ஆனாலும் நீ எங்க குழந்தை..கவலையிருக்கும் ..ஜாக்கிரதையாக இரு . சரியாத்தான் இருப்பே கடிதாசு போடு என தாயன்பை காட்டினார்.

சோனியா கிளம்பப் போறீங்க ..வாழ்த்துகள்..என்ன என்ன உடன்பாடுகள் இருக்கு எப்படி மேம்படுத்தப் போகிறாய் எனக் கேட்டு தெரிந்துகொண்டார்.தன் கணவன் இழப்பு குறித்த சோகம் எதையும் காட்டாமல் graceful ஆக வாழ்த்தினார்.

பிரதமர் வாஜ்பாயி வாங்க தூதரே என வரவேற்று அன்பு காட்டினார். எப்ப போறீங்க வசதி என்ன .. உங்களிடம் நிறைய எதிர்பார்க்கிறேன் என வாழ்த்தினார்.

பெர்ணாண்டஸ் பாதுகாப்பு மந்திரி சொன்ன வரிகள்

We are committed to territorial integrity of Sri Lanka..in late 1980s LTTE cadres met me. I told them so. They were not pleased. (At the same time) we have to encourage the SL govt to concede maximum. அவர் அரசின் நிலைப்பாட்டை தெளிவாக சொன்னார்.

சந்திரசேகர், முதல்வராக இருந்த கருணாநிதிக்கு சொல்லப்பட்ட சிலவற்றை அவர் கேட்காமல், புலிகள் ஆதரவு நிலை எடுத்தது போல் ஆதாரமில்லா செய்தியை சொன்னதாக கோபு சொல்கிறார்.

நரசிம்ம ராவ் எதிர்மறையாக, நீ தோற்பதற்காக அங்கே போகிறாயா எனக் கேட்டார். உன் தமிழ் அங்கு தவறாகவே புரிந்துகொள்ளப்படும் என்றார். நான் வெளிப்படையா பேசுவதை தப்பா எடுத்துக்காதே. கவனமாக இரு. சரியாக இருப்பாய் என அறிவேன். யார் கண்டா உன் தமிழே உனக்கு உதவவும் கூடும் என வாழ்த்தினார்.

மன்மோகன்சிங் , வழக்கம் போல் அமைதியாக சில கேள்விகளுடன் கடவுள் அருள்வார் என வாழ்த்தினார்.

வைகோவிடம் இலங்கை அரசியல் சூழல் மேம்பட உதவ வேண்டும் என கோபு கேட்டுக்கொண்டார். முரசொலி மாறன் வெளிப்படையாக இருந்தார். மாறன் சொன்ன வரிகள்

Nobody knows Pirabakaran’s mind. Nobody is in touch with him.

கோபு அவர் தன்னை யாசர் அராபத் என நினைக்கிறரா என்றார். மாறன் பதிலில் அவர் நம் கோடம்பாக்கத்தில் அலைந்த இளைஞர்தானே என்றார்.

குஜ்ரால் ,பிரபாகரன் தான் பார்த்த இரத்தத்திற்கு ஈழம் தான் பதில் என பேசிக்கொண்டிருப்பவர். No point talking to LTTE ..peace will have to found minus Pirabakaran. ..Chandrika is the best bet for Sri Lanka and an asset to us என்றார்.

கலைஞர் வருத்த முகம் காட்டினார். இங்கு கோபு கருணாநிதி கருத்தாக எழுதியவை P will never have a change of heart. ஜாக்கிரதையாக இருங்கள்..

இப்படி பிரபாகரன் குறித்த பல மதிப்பீடுகள், இலங்கை நிலைமைச் சொல்லி கோபுவை அனுப்பி வைத்தனர்

பார்க்கலாம்…

25-6-2025

#theundyinglight

june 27

கோபால்கிருஷ்ண காந்தியின் நூல் குறித்த 9வது பதிவு. என் வாசிப்பில் பட்ட சுவாரஸ்ய அம்சங்களை, அரசியல் முக்கியத்துவமா இல்லையா என்கிற எடைக்குள் மட்டும் நிறுக்காது தரப் பார்த்துள்ளேன். ஒரு புத்தகம் குறித்து இவ்வளவு நீள் அறிமுகம் தேவையா என்பதும் கேள்விக்குரிய ஒன்றே.

கோபு 21ஆம் நூற்றாண்டின் ஆண்டுகளுக்கு அழைத்துச் செல்கிறார். இந்நூலில் 8 இயல்கள். 7 ஆம் இயலுக்குள் சற்று அழைத்துப்போகிறேன். 8 ஆம் இயல் சிறிய அளவிலானது தான். தக்கபடி என் பதிவுகள் அமையவேண்டும்.

இலங்கை தூதரகப் பணிக்காலம் ஈழ விடுதலை தீவிரப்பட்ட காலம். முக்கிய தலைவர்களான ஸ்ரீமாவோ பண்டாரநாயக, சந்திரிகா, ரணில் உள்ளிட்ட பலருடன் கோபுவிற்கு உரையாட வாய்ப்பு கிடைக்கிறது. யாழ்ப்பாணம் உள்ளிட்ட தமிழர் பகுதிகள் குறித்த நேரடி பார்வை அனுபவம் கிட்டுகிறது. நார்வே நாடு தான் இலங்கை இனச் சிக்கலுக்கான சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது.

டெல்லியில் சந்திரிகா, பிரதமர் வாஜ்பாய், அத்வானியை சந்தித்தார். என்னாச்சு குஜராத்திற்கு என எதிர்பாரா கேள்வியை எழுப்பினார் சந்திரிகா. வாஜ்பாய் அத்வானியை கை காண்பித்தார். அத்வானி இப்ப அவ்வளவு மோசமாக இல்லை, நன்றாகிவிட்டது என்கிறார். கோத்ரா சம்பவம்- முஸ்லீம்கள் அழித்தொழிப்பைப் பற்றித்தான் சந்திரிகா கேட்டார். வாய்பாய் சொன்ன பொருள் பொதிந்த இரு வார்த்தைகள் ' காந்தி தேசமது' …பாவிகளே இப்படி செய்தீட்டீங்களே என வாஜ்பாய் சொல்லாமல் சொன்னாரோ..

2002ல் இலங்கையிலிருந்து உன்னை லண்டன் அனுப்புகிறோம் என்கிற செய்தி கோபுவிற்கு தரப்பட்டது. மூட்டை முடிச்சு தயாரான நிலையில், கடைசி நேர மாற்றமாக நார்வே ஆஸ்லோ செல் என்றனர். அறிஞர் ரோனன் சென் லண்டன் சென்றார். ஆர் வி இதை அறிந்து, என்னிடம் சொல்லியிருந்தால் வாஜ்பாயிடம் சொல்லி லண்டனே போடச் சொல்லியிருப்பேன் என்றார்.

கேஆர் நாரயணனுக்கு அடுத்து குடியரசு தலைவர் யார் கேள்வியானது. பி சி அலெக்சாண்டர் பெயர் அடிபட்டது. மறுபடியும் மலையாளியா, இல்லை கிருஷ்ண காந்த் என சந்திரபாபு நாயுடு கொடி உயர்த்தினார். வாஜ்பாயும் ஏற்றுக்கொண்டார். ஆனால் கடைசி நேரம் என ஒன்று

இருக்கிறதே. அது ஏ பி ஜே அப்துல் கலாம் என திசைகாட்டியது. அவரும் ஏற்றார்.

கோபுவிற்கும் கலாமிற்கும் நடந்த தொலைபேசி உரையாடல் கூட சுவாரஸ்யமானதே. கோபு என் மரியாதை வாழ்த்துக்கள் என்றார். எனக்கு உங்கள் வாழ்த்து இருக்கிறதா (ஆம் தமிழில்தான்) கலாம். பரிபூர்ணமாக - கோபு

சரி ராஷ்டிரபதி பவன் பற்றி உங்களுடன் பேசவேண்டும். எப்ப இந்தியா வருவீர்கள். ஆகஸ்ட்டில்தான். போனின் பேசலாமா. - கலாம்

ஆமாம் இது தான் நம்பர்.- கோபு

பாகிஸ்தான் முஷாரப் இந்தியா வந்தார். டெல்லியின் ' தீஸ் ஜனவரி மார்க்' வழியே செல்லும்போது ஏன் இந்த பகுதிக்கு இப்படி பெயர் எனக் கேட்டார். காந்தி படுகொலை நாள் பெயரானது என்கிற செய்தி சொல்லப்பட்டது. ஆமாம் காந்தியை சுட்டாங்களா, கத்தியால் குத்தி கொன்றார்களா…எவ்வளவு இந்தியா குறித்த அறிவு பாருங்கள் முஷாரபிற்கு என கோபு சொல்கிறார். இப்படி அபத்தங்களையும் சற்று அப்பிக்கொண்ட பெரிய மனிதர்கள்தான் கோடிக்கணக்கான மக்கள் வாழ்வை நிர்ணயிக்கிறார்கள்..பரிதாப உலகம்

கோபுவிற்கு ஆஸ்லோ வாழ்க்கை அறிவார்ந்த சூழல். அங்கு நோபல் பரிசு கமிட்டி அலுவலகம் சென்றபோது, காந்திக்கு நோபல் தரமுடியாமை குறித்து பல உயர் பொறுப்பாளர் வருந்தினர். இல்லை, காந்திக்கு அது ஒன்றும் தனித்த ஒளி தந்துவிடாது என இந்திய தரப்பு வாதம். ஆஸ்லோவினர் இல்லை இல்லை, அப்பரிசுக்குத்தான் குறை எனச் சொல்லினர்.

ஆஸ்லோவிற்கு வந்த இந்தியர்களில் கோபு சிறப்பித்து பேசியது தோழர் சுர்ஜித் வருகையைத்தான். சுர்ஜித்திற்கு அப்போது வயது 88. நேரான நடை. தேநீர் கோப்பைக்கு கை ஆடவில்லை. அரசியல் தீர்க்கம். பேரறிவு கொண்ட அரசியல் விஞ்ஞான பேராசிரியராக அவர் தெரிந்தார் என கோபு சொல்கிறார்.

சுர்ஜித் சொன்ன சில கருத்துக்கள். இந்தியாவின் தலையாய அரசியல் செக்யூலரிசம் vs ஹிந்துத்துவா- என ஆகியுள்ளது. சோனியாவிடம் பிற கட்சிகளை அரவணைத்த அரசியல் எனச் சொல்லியுள்ளோம். ஜெயலலிதாவை கணிக்கமுடியாது. முலாயமை கொண்டுவரலாம். சரத்பவர் சுகர் வியாபாரத்திற்காக கொஞ்சம் பேசலாம். சோனியா

அந்நியர் என்பது எடுபடாது. இலங்கையில் எல் டி டி இ unreliable. Bad for SriLanka and Bad for us.

அடுத்து சத்ருக்கன் சின்ஹா அமைச்சர் பொறுப்பில் ஆஸ்லோ வந்தார். மிகவும் ஜாலியான மனிதர். வெளிப்படையாக துறை சார்ந்த விஷயங்களில் ' நான் பேனர்- செயலர் தான் பிலிம்' என்றார்.

ஆஸ்லோவில் இருக்கும்போது நட்வர்சிங் போன் வந்தது. என்ன 'வாஜ்பாய்- முஷாரப்பிற்கு' நோபல் எனப் பேச்சா…ஆமாம் அப்படி பேச்சு ஒன்று போகிறது. அய்யோ கூடாது. காந்தி நேருவிற்கே இல்லாதது எப்படிய்யா …பார்த்துக்க… நல்லவேளை பரிசு கென்யாவின் வாங்கரிக்கு போனது

வாஜ்பாய் அரசாங்கம் போய் மன்மோகன் அரசாங்கம் வந்தது. சோனியா தான் எடுக்கப்போவதில்லை என அறிவித்த நிலையில் மன்மோகன். கோபு எழுதுகிறார்

A better man, more decent, intelligent and honest, not to be found in Indian politics

இடதுசாரிகள் 60க்கும் மேற்பட்டவர் துணையில் மத்தியில் காங்கிரஸ் ஆட்சி.

மேற்கு வங்கத்தில் புத்ததேவ் முதல்வர் ஆகிறார். அங்கு கவர்னர் யாரைப் போடலாம் என்ற கேள்வி. வி கே ராமச்சந்திரன், யெச்சூரி போன்றவர் கோபாலகிருஷ்ண காந்தி என பரிந்துரைக்க மன்மோகன் சோனியா ஒப்புதலும் கிடைக்கிறது.

ஆஸ்லோவிலிருந்து கல்கத்தா. கோபுவின் துணவியார் தாராவிற்கோ , 'என்ன துப்பாக்கி காவலர்கள் சூழ வாழ்க்கை. நான் இயற்கை, பறவை என்றும் நீங்கள் எழுதிக்கொண்டும் இனி இருக்கலாமே என்கிற எண்ணம்' .

சோனியா , நான் உங்களை நேரு மய்யம் போன்ற அறிவார்ந்த இடத்தில் போட விரும்பினேன். நீங்கள் கவர்னர் என்றீர்களாம் என்றார். கோபுவிற்கோ நான் எங்கே சொன்னேன் எவர் காலை பிடித்தேன் என மன அசைவு.

கவர்னர் உறுதிமொழியை வங்கத்தில் எடுக்க 'டெக்ஸ்ட்' கேட்க, அதிகாரபூர்வமாக ஏதும் அப்படியில்லை எனச் சொல்லிவிட்டனர். நந்திகிராம் பிரச்னை வரும்வரை புத்த தேவ் உடன் கவர்னராக கோபுவிற்கு நல்லுறவே இருந்தது.

ஆர்வி உன் தாத்தா ராஜாஜி போலவே நீயும் அங்கு கவர்னரானாய் என வாழ்த்தினார். திருமதி ஜானகி வாங்க கவர்னர் அய்யா எனச் சொல்லிவிட்டு, நீ எப்போதும் எங்க மகன் தான் என வாஞ்சை காட்டினார்.

நாராயணன் மிக முக்கிய ஒன்றைச் சொன்னார். மேவ tricky state. If Congress had let Jyoti Babu become prime minister in 1998, the congress cpm relations would have matured. என்ன அருமையான கவலையுடன் இந்திய அரசியல் சென்றிருக்க வேண்டிய திசையை அவர் வெளிப்படுத்தினார் பாருங்கள்..

மன்மோகன் அவர்கள் காங்கிரஸ் நண்பர்கள் பலர் உதவி கேட்டு வரலாம். சிபிஎம் ‘ It has a certain way of doing things..even rigging elections..பார்த்து நடந்து கொள்ளுங்கள்

எங்களிடம் ஒருமுறை ரயில் பயணத்தில் கல்கத்தா சார்ந்த தமிழ் நண்பர்கள் சொன்னது நினைவிற்கு வருகிறது. சிபிஎம் அங்கு red dmk தான். துர்கா பூஜை போதெல்லாம் தெருவிற்கு தெரு கட்டாய அதிரடி வசூல் அட்டூழியம் நடக்கும் என்றனர். இது 1980களில் சொல்லப்பட்ட ஒன்று.

கவர்னர் அனுபவம், மோடி காலம் என கொஞ்சம் பேசிவிட்டால் இந்நூல் குறித்த பதிவுகளை நான் நிறுத்திவிடலாம்

பார்க்கலாம்..

27-6-2025

#theundyinglight

june 29

The Undying Light -10

India’s light எது. அவரவர் சார்பு நிலையில் இதற்கான பதில் ஒன்றையோ , கட்டாகவோ ஒருவர் பெறலாம். நம்பிக்கையிருக்கும்வரை அதை அவர் போற்றலாம்.

இந்திய விடுதலை மற்றும் நவீன கட்டுமான வாசிப்பில் இப்படி இந்தியாவிற்கான ஒளிரும் விளக்குகள் வரிசையாக இருக்கலாம். அவை எதிரும் புதிருமாகக்கூட ஒளிரலாம். சில டிம் ஆகும்- ப்யூஸ் ஆகும். சில பளிச்சென இருப்பது போல் இருக்கும்.

இந்த ஒளிர் விளக்குகளில் உளச்சான்றுடன் எரியும் ஒரு விளக்கு எனில், என் விரிவான வாசிப்பு புரிதல் கொண்டு சொல்லப்போனால், அது காந்தி எனும் சுடர் விளக்கு . அது ஓரமாக இருக்கலாம். பார்வைக்கு துருத்தி தெரியாமல் , நிரம்ப வெளிச்சத்தை அள்ளி அப்பாமல் இருக்கலாம். ஆனால் ஏந்துவர்க்கு துணைக்கு வரும் சுடரது.

கோபால்கிருஷ்ண காந்தியின் இந்நூலை இப்பதிவுடன் முடித்துக்கொள்கிறேன். அப்பாடா…காந்தியின் பேரப்பிள்ளை என்கிற லேபிள் அவருக்கு பெருமளவு உதவாமல் இல்லை. வாழ்க்கையின் உயர்நிலைகளுக்கு (ஐ ஏ எஸ், தூதரகம், குடியரசு மாளிகைப்பணி, கவர்னர்) செல்ல அவரது திறமையில்லாமல், பேர லேபிள் மட்டும் காரணமில்லை. கடந்த 75 ஆண்டுகால இந்தியாவின் குடியரசு தலைவர்கள், பிரதமர்கள், கட்சித் தலைவர்கள், வெளிநாட்டு தலைவர்கள், ஏராள அறிவுக்குழாமினர் என அவரின் வட்டம் விரிந்த அனுபவ நினைவுகள், நாட்டு உலக நடப்புகள் இந்நூலில் தொட்டுக்காட்டப்பட்டுள்ளன. குடும்பமும் உள்ளீடாக நகர்கிறது.

மேவ கவர்னர் பொறுப்பில் முதல்வர் புத்ததேவ், மூத்தவர் ஜோதிபாசுவுடன் நல்லுறவு இருந்தது. மமதா போராட்டம், சிங்கூர் நந்திகிராம் உறவில் சிக்கலை உருவாக்கின. சிபிஎம் கட்சிக்கு கவர்னர் மீது விமர்சனம் எழுந்தது. முதல்வர் கவர்னர் போனைக்கூட எடுக்காத நாட்களுமிருந்தன. மேவ மின்வெட்டு அக்காலத்தில் பெரும் விமர்சனங்களை சந்தித்தது.

மன்மோகன் ஆட்சி நியுக்கிளியர் உடன்பாடு காரணமாக, சிபிஎம் முன்முயற்சியால் இடதுகளின் ஆதரவை இழந்தது. எடுத்த முடிவு சரியா விவாதம் இன்றும் இருக்கிறது. பிரதமராக வந்த மன்மோகனை முதல்முறையாக சந்தித்த பாசு ஆசி சொல்லி " நம் இரு கட்சிகளும் பொறுமையாக பொறுப்பாக இருந்தால் நல்லது. வலதின் ஆபத்தை புரிந்து " என்றார். கே ஆர் நாரயணன் காங்கிரஸ் மட்டும் 1998ல் ஜோதிபாசுவை பிரதமராக வலியுறுத்தி கொண்டு வந்திருந்தால், அரசியல் திசை மாறியிருக்கக்கூடும் என எண்ணினார். வரலாறு ifகளுக்கு இடம் கொடுப்பதில்லையே..

பிரதிபா அவர்கள் சோனியா விருப்பப்படி குடியரசு தலைவர் ஆனபோது, கோபு வாழ்த்தினார். இருவரும் கவர்னர்களாக சமகாலத்தில் இருந்தவர்கள். பிரதிபா அவர்கள் அப்போது சொன்னார், கோபால் நீங்கள்தான் வருவீர்கள் என நினைத்தேன் என்று… பிரதிபாவின் தனிச் சிறப்பு, அவர் ஒருவருக்குக் கூட மரணதண்டனையில் கையெழுத்து இடமாட்டேன் என்றது… ஆயுள்தண்டனை என மாற்றவே அவர் சம்மதித்தார்.

2014ல் ஏற்பட்ட மோடி ஆட்சி, அதன் பத்தாண்டுகள் குறித்த சற்று கவலை தோய்ந்த சன்னமான விமர்சன பதிவை கோபு செய்துள்ளார். லண்டன் காந்தி சிலை திறப்பு நிகழ்வில் அருண் ஜேட்லியுடன் கோபுவும் பங்கேற்றார். கோட்சேவிற்கு சிலை எனக் கொண்டாடக்கூடியவர் உள்ள சூழலில், காந்தி சிலை என கோபு பேசினார். அருண்ஜேட்லி கையைப் பற்றிக்கொண்டு ' Gopal, be assured we will never let that happen' என்றார். ஆனால் அவரை காலம் சீக்கிரம் அழைத்துக்கொண்டுவிட்டது.

சந்திரசூட் சொன்னதை கோபு எழுதுகிறார்

Dissent is a safety valve of democracy. If you don't allow dissent, the pressure valve of democracy will burst

சோனியா கோபுவை கூப்பிட்டு வெங்கையா நாயுடுவிற்கு எதிராக துணைஜனாதிபதி தேர்தலில் நிற்க வேண்டினார். மேவ பிரச்சனைகளையெல்லாம் மறந்து யெச்சூரியும் வலியுறுத்திட, நிற்கும் நிலை கோபுவிற்கு. தோல்வியடைந்தார். வெங்கையா தன் வெற்றிக்கு பின்னர் கோபுவிடம் வந்து " Sir, I have long been an admirer of your grandfather, Rajaji..I will call on you in Chennai " என்கிற நாகரிகம் பாராட்டினார். ஏன் காந்தி பெயரையும் சொல்லவில்லை என என் மனது குற்றம் கண்டது.

கோபு காந்தியின் பேரன்.அவர் நான் காந்தியன் அல்லன் என்கிறார். தன்னைப்பற்றி டைரியில் அவர் ஒருமுறை எழுதிக்கொண்ட வரிகள்

I do not know if I am liberal or conservative, a socialist or a believer in free enterprise. I am not patriotic enough, not learned enough, not earnest though, not knowledgeable or experienced enough. I have lived on the capital of my surname

வேறு சர் நேம்களை கொண்டு பல நேரங்களில் அரைவேக்காடு அரசியல் காட்டும் பலரைக் காணலாம். கோபுவின் டைரி எழுத்தை அவருக்கானதாக மட்டும் நான் எடுத்துக்கொள்ளவில்லை. வாழ்வில் முட்டி மோதி பயணப்படும் ஒவ்வொருவரின் டைரி குறிப்பாகவும் இந்த நிறைவின்மை இருக்கவே செய்யும். உலக வாழ்வு , நம் பேச்சைவிட எழுத்தைவிட எப்போதும் பசுமையாக இன்னும் இன்னும் என மனித தாகத்திற்காக காத்துக்கொண்டேயிருக்கிறது. குவளை நீருடன் ஏதோ தாகம் தணித்துக்கொள்ளும் பிறவிகளாக உலகத் தடாகத்தில் நாம் ஒவ்வொருவரும்…

சுபம்

29-6-2025

பட்டாபியின் நூல்கள் சில

1. மார்க்சியத் தடங்கள்
2. ரோசாலக்ஸம்பர்க்
3. போராளிகளின் குரல்
4. பகவத்கீதை பன்முகக் குரல்கள்
5. Trade Justice in Telecom
6. Selected Ideas of O.P Gupta
7. ஹெகல் துவங்கி..
8. கார்க்கியின் அரசியல்வெளி
9. நவீன சிந்தனையின் இந்தியப் பன்முகங்கள்
10. காந்தியைக் கண்டுணர்தல்
11. நேருவின் மரபு
12. பெரியாரின் பொதுவுடைமை புரிதல்
13. அம்பேத்கரும் கம்யூனிசமும்
14. தோழர் காந்தி -மகாத்மாவின் சோசலிச உரையாடல்
15. பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் (என் எளிய வாசிப்பில்)
16. லெனின் நான்கு கட்டுரைகள்
17. என் வாசிப்பில்…
18. சாதி எனும் பிசாசு
19. திராவிட- திராவிடர் இயக்கம்
20. கப்பற்படை புரட்சி
21. மார்க்ஸ்- மார்க்சியம் சில நூல்கள்

சிறு வெளியீடுகள்

1. ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா
2. சிகாகோ மேதின தியாகிகள்
3. பகுனின் போராட்ட வாழ்வும் அனார்க்கிசமும்
4. விடுதலைக்கு முன்னர் எம் என் ராய்
5. பிரடரிக் எங்கெல்ஸ் நட்பின் சிகரம்
6. நேதாஜி சுபாஷ் – கம்யூனிஸ்ட்கள் உறவும் உரசலும்
7. காந்தியும் கம்யூனிசமும்
8. வட்டமேஜை மாநாட்டில் அம்பேத்கர்
9. வரலாற்றில் சௌரி சௌரா (நூற்றாண்டின் நினைவாக)
10. தோழர் டிராட்ஸ்கி சில இடுகைகள்
11. ஆச்சார்யா கிருபளானி
12. மினு மசானி
13. சாவர்க்கர்
14. அத்வானி
15. ஹிந்த் ஸ்வராஜ் தோற்றுவாயும் உள்ளடக்கக்கூறுகளும்